
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு

jpg234744421- [1]2.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ விடுதலைப் புலிகள்
இயக்கத்தின் தலைசிறந்த
கெரில்லா தளபதியான
லெப்டினன்ட்
செல்வநாயகத்திற்கு இந்த
அரசியல் ஆவணத்தை
சமர்ப்பணம் செய்கிறோம். 1983
ஆடி மாதம் 23ம் தேதி
திருநெல்வேலியில் சிங்கள
இராணுவத்தினருக்கு எதிராக
விடுதலைப் புலிகள் நடத்திய
அதிரடித் தாக்குதலின்போது
லெப்டினன்ட் செல்வநாயகம்
வீரமரணமடைந்தார்,
இத்தாக்குதலில் 13 சிங்கள
இராணுவப் படையினர்
கொல்லப்பட்டனர்.
திருநெல்வேலித் தாக்குதல்
உட்பட பல கெரில்லா அதிரடித்
தாக்குதல்களுக்கும் தலைமை
தாங்கி வெற்றிகரமாக நடத்தி
முடித்த செல்வநாயகம்
யாழ்ப்பாணத்திலுள்ள
கல்வியங்காட்டை
பிறப்பிடமாகக் கொண்டவர்.
இவர் அம்மான், செல்லக்கிளி
என்ற பெயர்களாலும்
அழைக்கப்படுவார்.
இளம்பிராயத்திலேயே
ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின்
சுதந்திரப் போராட்டத்திற்கு
தம்மை அர்ப்பணித்துக்கொண்ட
செல்லக்கிளி விடுதலைப் பற்று
மிகுந்த ஒரு வீரமறவன்.
இவரது தன்னலமற்ற
உழைப்பும், தியாகமும்
என்றும் எமது மக்களால்
நினைவுறுத்தப்படும்.



□□□□□□□_□□□□□□□□□_□□□□□□□_□□□□□□ jpg234744421-□□□□□□□□□-□□□□□□□□□-□□□□□-□-□□□□□□□ [2]13.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு

(1975 - 1984)

தமிழீழ விடுதலைப் புலிகளின்
புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை
வரலாற்று காலவரையறை
அடிப்படையில் சித்தரிக்கும் ஆவணம்

Liberation Tigers Of
TAMIL EELAM

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ்மக்கள் காலங்காலமாக அஹிம்சைவழியிலேயே தங்களது அரசியற் போராட்டத்தினை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களது அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக காந்திஜீயின் அஹிம்சை வழிக் கோட்பாட்டினைப் பின்பற்றியே தமிழ் மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். கால் நூற்றாண்டு காலமாக ஒற்றை ஆட்சி அமைப்பிற்குள் சமஷ்டி உரிமை கோரியே தமிழ் மக்கள் போராடி வந்துள்ளனர். பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் தமிழ்மக்களின் நியாயமான - சட்டபூர்வமான - நாகரிகமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள ஆட்சியாளர்களால் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. ஒடுக்கப் பட்ட தமிழ் இனத்தின் உரிமைகளுக்கான போராட்டத்தினை மனிதாபிமான முறையில் தீர்த்து வைப்பதற்கு மாறாக, சிங்கள இனவாத அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு தமிழ் மக்களின் அஹிம்சா ரீதியிலான சத்தியாக்கிரகப் போராட்டங் களை ஈவிரக்கமின்றி நசுக்கியது. இத்தகைய காட்டுமிராண்டித் தனமான ஒரு ஒடுக்குமுறையானது தமிழினத்தின் சமூக அமைப்பின் அடித்தளத்தையே தாக்கியது.



தமிழ்மக்கள் மீதான வன்முறைகள் அலை அலையாகத் தொடர்ச்சி யாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நாசகார இனப்படுகொலைத் திட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசே திட்டமிட்டு மேற்கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவில் ஆயுதப் படைகள் குவிக்கப்பட்டன. இறுதியாக, தமிழ்ப்பிரதேசம் பூரண இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு தமிழருக்கெதிரான ஒடுக்கு முறையும். தொடர்ச்சியான இராணுவப் பயங்கர வெறியாட்டமும், சிங்களத் தலைவர்கள் நிரந்தரமாக இழைத்து வந்த நம்பிக்கைத் துரோகங்களும் சமாதானமான முறையில் தங்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதில் தமிழருக்கிருந்த சகல நம்பிக்கைகளையும் அழித்து விட்டன. அரசியல் அரங்கில் தமிழர்கள் நிராதரவாக்கப் பட்டார்கள்.

வரலாற்றின் இந்த நெருக்கடியான கால கட்டத்தில்தான்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம் (revolutionary armed resistance movement) தோற்றம் கண்டது. அரசு கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித்தனமான, இன அழிவு தழுவிய ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறெந்த வழியும் இருக்கவில்லை. எனவே 1970களின் ஆரம்பத்தில் தமிழ் மண்ணில் தோற்றம் கண்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை வளர்ச்சியும், விரிவாக்கமும் அடைந்த தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாகவே நாம் கொள்ளவேண்டும். தாங்கொணு ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டிய இறுதி கட்டத்திற்கு தள்ளப்படும் மக்கள் வன்முறைப் போராட்டத்தை வரித்துக்கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. எனவே இந்த வன்முறைப் போர்வடிவமானது எமது அரசியற் போராட்டத்தின் ஒரு புதுமுகத் தோற்றப்பாடன்றி வேறொன்றுமல்ல. இரு தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி, அப்பிரதான முரண்பாட்டின் வரலாற்றுக் குழந்தையாகவே ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது, இந்த முரண்பாடானது, காலப்போக்கில் அடக்குமுறையையும் அதற்கு எதிரான ஆயுத எழுச்சியையும் படிப்படியாக கூர்மையடையச் செய்தது,

புரட்சிகரத் தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்தே ஆயுதப் புரட்சிகர இயக்கம் கருக்கொண்டது, தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட ஒடுக்குமுறை இனவாதக் கொள்கைகளால் தமிழினத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஏற்பட்ட பாரதூரமான பாதிப்புக்களே தமிழ் இளைஞர்களைப் புரட்சிகரப் போராட்டப் பாதையை முன்னெடுக்க நிர்ப்பந்தித்தன. படித்த தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்புகள் பூரணமாக நிராகரிக்கப்பட்டபோது அவர்களுக்கு இருள்மயமான எதிர்காலம் மாத்திரமே மிஞ்சிக்கிடந்தது. சிங்கள அரசாங்கத்தின் பாரபட்சமான—தமிழர்களுக்கு எதிரான 'தரப்படுத்தல்' கல்விக் கொள்கையும், 'சிங்களம் மட்டும்' என்ற மொழிக் கொள்கையும் தமிழ் மக்களின் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினையும் வேலை வாய்ப்பினையும் இல்லாமல் செய்துவிட்டது. மேலும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் நாளாந்தம் மோசமாகிக் கொண்டிருந்தது. பொலிஸும் இராணுவமும் தமிழ் இளைஞர்களைக் காரணம் ஏதுமில்லாமலேயே கைது செய்தும், மோசமாகச் சித்திரவதை செய்தும் கொன்றும் அட்டூழியங்கள் இழைத்தன. வேறு வார்த்தைகளில் சொல்வதானல், தமிழ் இளைஞர்களே அரச பயங்கர



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வாதத்திற்கு நேரடியாக இலக்காகி கொடூரமான—மனிதாபிமான மற்ற சித்திரவதைகளை அநுபவித்தனர்.

தொழில் வாய்ப்புகளும் உயர் கல்வி வாய்ப்புகளும் மறுக்கப் பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும், தொடர்ச்சியான பொலிஸ் இராணுவ அட்டூழியங்களால் சினமும் கொண்ட தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் தங்களின் இந்த மோசமான வாழ்நிலைமைகளைப் பூரண மாக மாற்றியமைக்கும் ஒரு புரட்சிகர சோஷலிஸப் போராட்டத்தின் மூலமே தங்களின் தலைவிதியை மாற்றியமைக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டனர். இளைய தலைமுறையினர் சரியாக உணர்ந்து கொண்டதைப்போல, மோசமாகிக் கொண்டிருந்த தேசிய ஒடுக்கு முறையின் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் மாத்திரமே ஒரேயொரு தீர்வாக எஞ்சி நின்றது. 1970களின் ஆரம்பத்தில், எதேச்சையாகக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவாகமெடுத்த தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் அரசியல் வன்முறை எழுச்சிகள், புரட்சிகர அரசியற் கோட்பாட்டையும் நடைமுறையையும் கொண்ட புரட்சி அமைப்பொன்றை நாடி நின்றது. இந்தப் பிரத்தியேகமான அரசியற் சூழ்நிலையில்தான், அதாவது 1972ல், விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. **எமது இந்தப் புரட்சி இயக்கம் இன்றைய தலைவரும் இராணுவத் தளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டது.**

இயக்கம் தொடங்கப்பட்ட அதன் ஆரம்ப காலத்தில் **புதிய தமிழ்ப் புலிகள்** என்ற பெயரில் அழைக்கப்பட்டு, பின் 1976 மே ஐந்தாம் தேதி **தமிழீழ விடுதலைப்புலிகள்** என்று இயக்கம் புதிய பெயரைச் சூட்டிக்கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம் பிக்கப்பட்ட காலத்திலிருந்தே உறுதியும் அர்ப்பணிப்பும் பேரார்வ மும் கொண்ட இளம் புரட்சிவாதிகளை அது பெருமளவில் ஈர்த்துக் கொண்டது. நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டு, தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சி யத்தில் தோய்ந்த விடுதலைப் புலிகள் இயக்கம் வெகு விரைவிலேயே தமிழ் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாகப் பரிண மித்தது. விஞ்ஞான சோஷலிஸக் கோட்பாட்டை வரித்துக்கொண்ட புரட்சிகர விடுதலை இயக்கம் என்ற வகையில் தமிழீழ விடுதலைப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


புலிகள் இயக்கம் தேசியப் போராட்டத்தின் முன்னணி ஆயுதப் படையாகத் தன்னை விரைவிலேயே ஸ்தாபித்துக் கொண்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழ் தேசியச் சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமானது இதுகாலம் வரை நடைபெற்றுவந்த தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தினைப் பரந்துபட்ட மக்களின் ஆயுதப் போராட்டம் என்ற எல்லைக்கு விஸ்தரித்தது. எமது யதார்த்த வரலாற்றுச் சூழ்நிலைகள் அனைத்தையும் பற்றிய நுணுக்கமான பரிசீலனையின் அடிப்படையிலேயே பரந்த வெகுசனப் போராட்டத்தின் வடிவமாக ஆயுதப் போராட்டத்தை நாம் வரித்துக்கொண்டோம். எங்களின் தேசியப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் புரட்சிகரமான எதிர்ப்பியக்கத்தைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் எதுவுமேயில்லை என்ற யதார்த்த நிலைமையை முழுமையாகக் கிரகித்த பின்னரே நாம் ஆயுதப் போர் முறையைத் தழுவிக் கொண்டோம். ஆயுதப் போராட்ட வடிவமாக நாம் வரித்துக் கொண்ட கெரில்லாப் போர் முறையானது எமது தேசியப் போராட்டத்திற்கு மிகவும் பொருத்தமான போர் வடிவமாகும். நிராயுதபாணிகளான வலிமை குறைந்த தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்ட காலகெரில்லா யுத்தப் பாதையே மிகவும் பொருத்தமானது என்பதால்தான் இப்போர் யுக்தியை நாம் கைக்கொண்டோம்.

அரச ஒடுக்குமுறையை எதிர்க்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகவே எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பத்தில் அமைந்தது. காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறைக்கு இலக்கான ஒரு சமூகம் என்ற வகையில் ஆயுதம் ஏந்தி எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை எமக்குண்டு. காலப்போக்கில் அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி வந்ததால் இந்த வெறியாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் எமது போராட்ட நடவடிக்கைகள் புரட்சிகர எதிர்த் தாக்குதல்களாக அமைந்தன. எமது கெரில்லாப் போர் யுக்தியை வெறுமனே 'தாக்கிவிட்டு ஓடி மறையும்' தந்திரோபாயம் என விமர்சிப்பவர்கள் கடந்த பத்தாண்டு காலமாக விட்டுக்கொடுக்காது, தொடர்ச்சியாக, தீர்க்கமாக நாம் நடத்திய கெரில்லாத் தாக்குதல்கள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கணிசமான அளவு எமது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறதென்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அரச ஆயுதப் படைகளை கிலிகொள்ளச் செய்து அவர்களது மனோவுறுதியையும், கட்டுப்பாட்டையும் குலைத்து விட்ட எமது கெரில்லாப் போர் முறையானது ஸ்ரீலங்கா அரச அமைப்பையே ஆட்டம் காணச் செய்திருப்பதுடன் தமிழர் பிரச்சனையை சர்வதேசமயப்படுத்தவும் உதவியுள்ளது. கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் ஒரு உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. இதனைப் புரிந்துகொள்ளாத சிலர் கெரில்லாப் போர் வேறு, மக்கள் போர் வேறு எனத் தவறாக விமர்சிக்கின்றனர். கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து, அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப்போர் முறையை பரந்துபட்ட மக்கள் போராக விஸ்தரிப்பதே எமது நோக்கமாகும்.

ஒடுக்குமுறை மோசமாகிக்கொண்டு போகும்போது எதிர்ப்பு முறையும் மேலும் உரங்கொண்டு தீவிரம் பெறுவது இயற்கை. சகல புரட்சிகரப் போராட்டங்களிலும் இதுவே சரித்திர நியதியாக இருந்து வந்திருக்கிறது. சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் கைவிட்டு திட்டவட்டமாகச் சொல்ல முடியாத—எப்போதோ வருமென்று கூறப்படுகிற எதிர்காலத்தில், சிறந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஒடுக்குமுறைக்கு மாறாக, எதிர்ப்பு முறைகளைத் துரிதப்படுத்துவதன் மூலமே இந்த முரண்பாட்டினைச் சரியாகக் கையாளுவது சாத்தியமாகும். இதுவே எமது திட்டவட்டமான அரசியல், இராணுவக் குறிக்கோளாகும்.

எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கின் பல்வேறு கட்டங்களையும் நுணுகி ஆராய்வதன் மூலமே அதன் அரசியல், இராணுவ, முக்கியத்துவத்தினை விளங்கிக்கொள்ள முடியும். இவற்றைத் தனித்த நிகழ்ச்சிகளாக—'தனி நபர் பயங்கர வாதம்' என்று முத்திரை குத்துவதை விடுத்து இவற்றை அதன் வரலாற்றுப் பின்னணியிலேயே பரிசீலனை செய்ய வேண்டும்.

jpg234744421 [8]64.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது இயக்கத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் பொலிஸ் உளவுப்படையின் அமைப்பினைச் சிதைப்பதையே மையமாகக்கொண்டிருந்தன. தமிழ் மக்களின் கிளர்ச்சிகரமான எழுச்சிகளை நசுக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ் பொலீஸ் அதிகாரிகளை அழைத்து வடக்கில் பொலீஸ் உளவுப்படையை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்தியிருந்தது. இந்த பொலிஸ் உளவுப்படையில் பொலீஸ் அதிகாரிகள் மட்டுமல்ல, எமது இயக்க நடவடிக்கைகளைப் பற்றித் தகவல்கள் வழங்குவோரும் துரோகிகளும் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் எமது இயக்க நடவடிக்கையைப்பற்றிக் கூறுகிற தகவல்களுக்கு அரசு பெருந்தொகைச் சன்மானங்களை இரகசியமாக வழங்குகிறது. இத்தகைய பொலீஸ் உளவு அமைப்பானது விசேடமாக அப்போதுதான் அரும்பிக் கொண்டிருந்த விடுதலை இயக்கத்திற்கும், பொதுவாகத் தமிழர்களின் தேசியப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. ஆகவே எமது ஆரம்பகால கெரில்லாப் போராட்ட நடவடிக்கைகள் எமது தமிழீழ மண்ணில் நிலைகொள்ள முயன்ற பொலீஸ் உளவு அமைப்பைச் சிதைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆகவே இந்தக் கட்டத்தில் ஒடுக்குமுறை அரசின் ஏஜண்டுகளாக எம்மக்கள் மத்தியிலேயே இருந்து கொண்டு இயக்கத்தைக் காட்டிக்கொடுக்கும் கயவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் இயக்கம் ஈடுபட்டது. காலகதியில் இத்தகைய பொலிஸ் உளவுப்படை அமைப்பைச் சிதைப்பதிலே நாங்கள் வெற்றி கண்டோம். இதனால் எமது இயக்க அங்கத்தவர்கள் மக்கள் மத்தியில் அரசியற் பணிகளில் ஈடுபடுவதும் கெரில்லாத் தளங்களை அமைப்பதும் இலகுவானதாக இருந்தது.

எமது ஆயுதப் போராட்டத்தின் இரண்டாவது நடவடிக்கை தமிழ் ஈழத்தின் பொலீஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்வதை மையமாகக் கொண்டிருந்தது. அரசபயங்கர வாதத்தின் கோட்டையாக தமிழீழ மண்ணில் செயற்பட்டுக் கொண்டிருந்த— தீவிர உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையங்கள் மீது கெரில்லாத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், எமது கெரில்லா போராளிகள் இராணுவப் படைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். ஆங்காங்கே இராணுவப்படையினர் மீது எமது கெரில்லாப் போராளிகள் மறைந்திருந்து தாக்கியும், நேர் நின்று போரிட்டும் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர். அந்த படையினர் மத்தியில்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



பீதியும், மரண பயமும், ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும உருவாகின; கூலிப் பட்டாளத்துக்கேயுரிய கோழைத்தனமும் தப்பி ஓடும் மனோபாவமும் வேரூன்றின; பலர் இராணுவ சேவையை விட்டே விலகினர். வடக்கே சேவையில் ஈடுபடும் இராணுவப் படையினருக்கு கூடிய சம்பளமும் மேலதிக ஊதியமும் அரசு வழங்கியது. அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் இயக்கத்தைக் கட்டி எழுப்பும் பணியும், மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியும் தீவிர முற்றன. எமது அரசியல் அணி'யின் தொடர்ச்சியான - கடின உழைப்பால் தமிழீழமெங்கும் தலைமறைவு கெரில்லாத் தளங்களை அமைப்பது விரைவிலேயே சாத்தியமானது. மேலும் எமது இயக்கத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புரட்சிகர புத்தி ஜீவிகள் ஆகியோர் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

மக்களுடன் வாழ்ந்து, நாளாந்தம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தாமும் முகம்கொடுத்து, அவர்களின் சுகதுக்கங்களில் பங்குகொண்டு தேசியப் போராட்டத்தில் அவர்களுடன் சேர்ந்து உழைப்பதில் எமது இயக்க அணியினர் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் சிங்களப் பேரினவாத அரசின் மீதும், இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. தமிழீழ மண்ணில் சிங்கள அரசின் சிவில் நிர்வாகம் பூரணமாக நிலைகுலைந்தது; அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தும் செயலிழந்தன; வங்கிகள் மூடப்பட்டன; பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன; அரச அமைப்பே முழுமையாகச் சீர்குலைந்தது. ஸ்ரீலங்கா மோசமான அரசியல், சமூக நெருக்கடியை எதிர்நோக்கியது. தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறை சம்பவங்களால் ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் சீரழிந்தது. ஆக எமது விடுதலைப் போர் சிங்கள ஆளும் வர்க்கத்தையும் சர்வாதிகார அரசினையும் ஆட்டங்காணச் செய்தது. ஸ்ரீலங்கா அரசு உலகிற்கு ''பயங்கரவாதம்'' என்று காட்டமுயன்ற போலி நாடகம் அரங்கேறவில்லை. எமது தொடர்ச்சியான ஆயுதப் போராட்டம் யதார்த்த நிலையை உலகிற்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது. எமது புரட்சிகர ஆயுதப் போராட்டமே தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வ தேச அரங்கில் முன்வைத்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

*எமது கெரில்லா அணிகளை புரட்சிகர மக்கள் இராணுவமாக விஸ்தரித்து, ஆயுதப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் அடுத்த கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். பரந்துபட்ட பொதுமக்களும் இணைந்து பங்குகொள்ளும் வெகுஜனத் தேசிய விடுதலைப் போராட்டத்தை இனங்காட்டும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம் இது. எமது பொது எதிரியான சிங்கள பேரினவாத அரசுக்கும் அதன் பயங்கரவாத அமைப்புக்கும் எதிராக எம்மோடு தோளோடு தோள் நின்று போராட மற்ற விடுதலை இயக்கங்களும் வந்திணையும் நாள் வெகுதூரத்தில் இல்லை. எமது புரட்சிகரப் போராட்டச் சூழ்நிலைகள் அத்தகைய ஒற்றுமையைச் சாத்தியமாக்கும் என்றே நாம் நம்புகிறோம்.*

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் ஆவணம். விடுதலைப் புலிகளின் புரட்சிகர ஆயுதப் போராட்டமானது இங்கு வரலாற்றுப் பின்னணியிலும் காலவரைமுறை அடிப்படையிலும் விபரிக்கப்படுகிறது. யாழ்ப்பாண மேயரான அல்பிரட் துரையப்பாவை ஒழித்த தினமாகிய 1975 ஜுலை 27-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் இந்த வரலாறு கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சகல ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளையும் பதிவு செய்கிறது. சகல கெரில்லாத் தாக்குதல்களுக்குமான அரசியல், வரலாற்றுப் பின்னணியும் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த வரலாற்றுக் குறிப்பானது எமது புரட்சிகர விடுதலை இயக்கத்தால் தலைமைதாங்கி முன்னெடுக்கப்படும் சுதந்திரப் போராட்டத்தின் உண்மைக் கதை. ஒரு பாசிஸ இனவாத அரசின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள ஒரு ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் நடத்தும் புரட்சிகரமான போராட்டத்தின் வரலாற்றுச் சித்திரம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்



அல்பிரட் துரையப்பா

27.7.75

தமிழினத்தின் துரோகியான யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா விடுதலைப்புலிகளால் 1975 ஜூலை 27ம் திகதியன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கருகில் சுட்டுக் கொல்லப்பட்டார். இத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த விடுதலைப்புலிகள் மேயரின் கார்ச் சாரதியை மடக்கி, அவரது காரிலேயே ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்ட இந்த நிகழ்ச்சி அரசாங்க மட்டத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. அல்பிரட் துரையப்பா மிகவும் விசுவாசம் கொண்டிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான இனவாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு இது பேரிடியாக அமைந்தது. சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை முழுமையாக நிராகரித்துவிட்டு 1972ல் புதிய அரசியலமைப்பை ஸ்ரீ.ல.சு. கட்சியே நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அநீதியான இந்த அரசியலமைப்பு தமிழர்களின் அரசியல் அந்தஸ்தினை அழித்ததுடன் தமிழர்களை அரசியல் ரீதியில் அனாதைகளாக்கியது. தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறும் வாய்ப்பை இல்லாதொழிப்பதனையே நோக்கமாகக் கொண்ட 'தரப்படுத்தல்' என்னும் இனப்பாரபட்சமான கல்வித் திட்டத்தை ஸ்ரீ.ல.சு. கட்சியே அறிமுகம் செய்தது. இக்கட்சியின் இனவாத ஆட்சியின் போதுதான் தீவிரவாதத் தமிழ் இளைஞர்களை வேட்டையாடுவதற்கு பொலிஸாருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இந்த ஒடுக்குமுறை அரசாங்கத்தின் இனவாதக் கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் ஏஜண்டாக அல்பிரட் துரையப்பா இயங்கிவந்தார். இவர் வடமாகாணத்தின் ஸ்ரீ.ல.சு. கட்சியின் பிரதான அமைப்பாளர் என்ற வகையில் தமிழர்களே பெருமளவில் வாழும் யாழ் மாவட்டத்தில் ஸ்ரீ.ல.சு. கட்சியை ஸ்திரப்படுத்துவதில் மிகக்கடுமையாக முன்னின்று உழைத்தார். அதிகார மோகமும் பதவி வெறியும் கொண்ட துரையப்பா தீவிரவாதத் தமிழ் இளைஞர்களின் அரசியல் கிளர்ச்சிகளை அழித்தொழிப்பதில் சிங்கள அரசுடன் கைகோர்த்து நின்று செயற்பட்டார். பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து, பல தீவிரவாதத் தமிழ் இளைஞர்களைச் சிங்கள அரசிற்கும் இவர் காட்டிக் கொடுத்தார், ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் இணைந்து கொண்டு நான்காவது உலகத்தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதைத் தடுக்கப் பெருமுயற்சி செய்தார். இந்த உலகத்தமிழ் மாநாட்டினைத் தமது

தமிழ் ஆவணக்காப்பகம் ... Archive

பெரும் கலாசார நிகழ்ச்சியாகவே கருதிய தமிழ் மக்கள் அதனை யாழ்ப்பாணத்திலேயே நடத்த வேண்டுமெனக் கோரினர். யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்துவதற்கு யாழ் திறந்தவெளி அரங்கினை வழங்க மறுத்ததற்கும், மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த மக்கள்மீது சிங்களப் பொலிஸ் படையினைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் அல்பிரட் துரையப்பாவே பொறுப்பு வகிக்கிறார். இந்த மாநாட்டில் சிங்கள பொலிஸ் ஏற்படுத்திய அமளி துமளியில் அப்பாவித் தமிழ் மக்கள் ஒன்பது பேர் பலியாகினர்.


அரசின் இனவாத ஒடுக்குமுறைக்கும், வன்முறைக்கும் இலக்கான தமிழ் மக்களைப் பொறுத்தவரை அல்பிரட் துரையப்பாவிற்கு ஏற்பட்ட கதி சிங்களப் பேரினவாதக் கட்சிகள் வடக்கே நிலைகொள்ள முனையும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முயலும் தமிழ்த் துரோகிகளுக்கும் இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. சுதந்திர தாகங்கொண்ட தமிழ் இளைஞரைப் பொறுத்தவரை இந்நிகழ்ச்சி விடுதலையை நோக்கிய நீண்ட, கடினமான பயணத்தில் ஒரு திருப்புமுனையாகும். ●

**5.3.76**

ஒரு புரட்சிகரத் தலைமறைவு இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் நிதிவசதிகள் மிகமுக்கியமான இடத்தை வகிக்கிறது. மக்களால் பேணிப் பாதுகாக்கக் கூடிய அளவில் விடுதலைப்புலிகள் இயக்கம் இக்காலகட்டத்தில் மக்கள் மத்தியில் தங்கள் அமைப்புகளை பரந்த அளவு விஸ்தரித்திருக்கவில்லை. நிதிவசதிகளைப் பெறுவதற்கு எமக்கு எந்த மார்க்கமும் இருக்கவில்லை. எனவே, எமது புரட்சிகர இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கப் பணத்தைப் பறித்தெடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஸ்ரீலங்கா அரசு எல்லா மக்களினதும் வரிப்பணத்திலிருந்தே தமது நிதியினைப் பெற்றுக்கொள்ளுகின்றதாயினும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் முழுமையாகவே புறக்கணிக்கப்பட்டு வந்தன. எனவே அரசாங்கப் பணத்தைப் பறித்தெடுத்து எமது மக்களின் விடுதலை இயக்கத்திற்கான நிதி ஆதாரத்தைப் பெற்றுக் கொள்வது நியாயமானது என்று நாம் உணர்ந்தோம்.

1976 மார்ச் 5ம் திகதி ஸ்ரீலங்கா அரசுக்குச் சொந்தமான புத்தூர் மக்கள் வங்கிக்குள் பகலில் நடவடிக்கையில் இறங்கிய விடுதலைப் புலிகள், வங்கி ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி வங்கியிலிருந்து

அல்பிரட் துரையப்பாவின் உடல்



## வங்கிகளிலிருந்து பணத்தைப் பறித்தெடுத்தல்

jpg234744421-[13]6.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## பொலீஸ் உளவுப் பிரிவை நிர்மூலமாக்கல்

**உரும்பராயில் குண்டுவீச்சு;**
**பெற்ரோல்நிலைய அதிபர் பலி!**
**கடந்த இரவு சம்பவம்**



நடராசா

## பொலீஸ் உளவாளிகள் ஒழிப்பு

ரொக்கமாக 500,000 ரூபாயையும், நகையாக 200,000 ரூபாயும் எடுத்துக் கொண்டனர். •

அல்பிரெட் துரையப்பா கொல்லப்பட்டது அதையடுத்து புத்தூர் வங்கிச் சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்து, வடக்கில் ஒரு விசேட பொலிஸ் உளவுப்படைப் பிரிவு அமைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் இயக்கத்தை அழித்தொழிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, கொழும்பிலிருந்த பொலிஸ் தலைமையகம் இப்பிரிவை ஸ்தாபித்தது. இப்பிரிவு தகவல் கொடுப்போர், துரோகிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு அமைப்பைத் தமிழ்ப் பிரதேசங்களில் உருவாக்கியது. இது எம்மியக்கத்தின் அரசியல்——ராணுவ நடவடிக்கைகளுக்குப் பெரும் குந்தகம் விளைவித்தது. வடக்கில் இந்த பொலிஸ் உளவுத்துறை அமைப்பைச் சிதைத்தாலொழிய எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கவியலாது என்பதை நாம் உணர்ந்தோம். எனவே இத்தீய சக்தியை பூண்டோடு ஒழிக்க முற்பட்டோம். •

**2. 7. 76**


1976, ஜூலை 2ம் திகதி உரும்பிராயைச் சேர்ந்த ந. நடராசா என்னும் பெற்ரோல் நிலைய முகாமையாளருக்கு விடுதலைப்புலிகள் மரண தண்டனை விதித்தனர். நடராசா என்பவர் பெயர்போன துரோகியும் பொலிஸாருக்குத் தகவல் கொடுப்பவருமாவார். இவர் பல தீவிரவாத இளைஞர்கள் பொலிஸ் பிடியில் சிக்கக் காரணமாயிருந்தார். இவர் காட்டிக்கொடுத்த இளைஞர்களுள் ஆயுதப் போராட்டத்தின் ஒரு முன்னோடியும் பிரசித்தமான விடுதலைப் போராளியுமான சிவகுமாரனும் ஒருவராவார். •

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கருணாநிதி, கான்ஸ்டபிள் சண்முகநாதன் ஆகியோரும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வி. சண்முகநாதனும் துரையப்பா கொலை சம்பந்தமான துப்புதுலக்கலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொலிஸ் உளவுப்படையின் முக்கிய நபர்களா

வார்கள்; இப்பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக போதுமான அளவு தகவல்கள் இருந்தன. இயக்கத்தின் பாதுகாப்பை மனதில் கொண்டு, இனவாத அரசின் அடியாட்களான இவர்களைக் கொன்றொழிக்க இயக்கம் முடிவு கட்டியது. ●

**14.2.77**

1977 பெப்ரவரி, 14ம் திகதி பொலிஸ் கான்ஸ்டபிள் கருணாநிதி எம்மியக்க கொரில்லாக்களினால் மாவிட்டபுரத்தில். சுட்டுக் கொல்லப்பட்டார். ●



துப்பாக்கிச் சூட்டில்
ஒரு கான்ஸ்டபிள் பலி
மாவிட்டபுரத்தில் சம்பவம்

**18.5.77**

1977 மே மாதம் 18ந் திகதி சண்முகநாதன் என்ற பெயரைக்கொண்ட இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள இணுவில் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இணுவில்—கே.கே.எஸ். பிரதான வீதியில் காலை 9—15 மணிவரையில் சிவில் உடையில் இவர்கள் பஸ் நிலையத்தை நோக்கி நடந்து சென்று கொண்டிருக்கும் போதே சைக்கிளில் வந்த இரண்டு விடுதலைப்புலிகள் இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ●



இரு பொலிஸார் சுட்டுக் கொலை
இணுவிலில் சம்பவம்

## அரசியல் துரோகிக்குத் தண்டனை

**27.1.78**

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எம். கனகரட்னம் என்பவர் பொத்துவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். சுதந்திர சோஷலிசத் தமிழ் ஈழத்தை அமைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைக்கு ஆணை வழங்கியே பொத்துவில் தொகுதி மக்கள் இவரைத் த.வி. கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தனர். தேர்தல் நடந்து முடிந்த ஒருமாத காலத்திற்குள்ளேயே கனகரட்னம் எம்.பி. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவினார். தமிழர்களது உரிமைகளின் பாதுகாவலனாக ஜே.ஆர். ஜயவர்த்தனவை ஏற்றுக்கொண்டதும், தமிழ் மக்களின் ஈழக் கோரிக்கையை இவர் பகிரங்கமாகவே நிராகரிக்கத் தொடங்கினார். இவ்வாறு தனது மக்களையும் தமிழர்களின் தேசியப் போராட்டத்தையும் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனமான அரசியல் நடவடிக்கையில் இறங்கினார்.



பொத்துவில் கனகருக்கு
துப்பாக்கிச் சூடு!
(கொழும்பு)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1978 ஜனவரி மாதம் 27ம் திகதி கொழும்பிலுள்ள சொள்ளுப்பிட்டியில் அவரது இல்லத்தில் விடுதலைப்புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானுர். மயிரிழையில் பொத்துவில் எம்.பி. கனகரட்னம் உயிர்தப்பிஞராயினும் சில மாதங்களின் பின் அவர் மரணமானுர். ●

## சித்திரவதையில் கைதேர்ந்த இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டார்



1



2

இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை 1
சப்-இன்ஸ்பெக்டர் பேரம்பலம் 2
சார்ஜன் பாலசிங்கம் 3
பொலீஸ் சாரதி சிறிவர்த்தன 4

**7.4.78**

பொத்துவில் எம்.பி. மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் உளவுப்படையினர் விடுதலைப்புலிகளை வேட்டையாடுவதில் மும்முரமாக இறங்கினர். இந்தப் பொலிஸ் உளவுப் படைக்குத் தலைமை தாங்கிய இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை பொத்துவில் எம்.பி. மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பொறுப்பான விடுதலைப்புலிகளை அடையாளம் கண்டுவிட்டதாகக் கூறப்பட்டது. விடுதலைப்புலிகள் எனச் சந்தேகப்படுபவர்களைக் கைது செய்வதற்காக வடக்கில் பொலிஸ் படையினர் பல்வேறு இடங்களில் திடீர் சோதனைகளை அடிக்கடி மேற்கொண்டனர். இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை சித்திரவதை செய்வதில் கைதேர்ந்தவர். தீவிரவாதத் தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்வதிலும், தடுப்புக்காவலில் வைப்பதிலும், அச்சுறுத்துவதிலும், ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்வதிலும் இவர் பேர் பெற்றிருந்தார். அரசியல் ரீதியில் விழிப்புணர்வுகொண்ட இளைஞர்களைக் காட்டுமிராண்டித்தனமாக நசுக்கி அழிக்கும் இனவாத அரசியல் ஏஜண்டாக பஸ்தியாம்பிள்ளை செயற்பட்டார். இதனுல் தமிழ் மக்களின் வெறுப்பிற்கு இவர் இலக்கானுர். எமது இயக்க நடவடிக்கைகள் பற்றிய பல முக்கிய தகவல்களை இவர் திரட்டி வைத்திருந்தமை விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்தன.

விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்ட இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை பொலிஸ் அதிரடிப் படையுடன் 1978 ஏப்ரல் 7ம் திகதி முருங்கன்—மடு வீதிக்கு உட்புறமான காட்டுப்பகுதிக்குள் திடீர் முற்றுகையை மேற்கொண்டார். பயிற்சி முகாமைச் சுற்றி வளைத்துக் கொண்ட பொலிஸ் படையினர் விடுதலைப்புலிகளைத் துப்பாக்கி முனையில் மடக்கினர். இந்தத் திடீர் நிகழ்ச்சியால் விடுதலைப் புலிகள் திகைப்புற்றனராயினும் கணநேரத்திற்குள் அபாயகரமான நிலைமையிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள உசாராயினர். விடுதலைப்புலிகளின் கமாண்டோத் தலைவர்களில் ஒருவரான லெப்டினன்ட் செல்லக்கிளி (செல்வ

நாயகம், அம்மான்) ஒரு பொலிஸ் அதிகாரியை மடக்கிப்பிடித்து அவரது கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியைப் பறித்தெடுத்து பொலிஸ் படையினரைச் சுட்டு வீழ்த்தினர். இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, சப்—இன்ஸ்பெக்டர் பேரம்பலம், பொலிஸ் கான்ஸ்டபிள் பாலசிங்கம், பொலிஸ் ட்ரைவர் சிரிவர்த்தன ஆகியோர் இச்சம்பவத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் அரசாங்கத்தைத் திகிலடையச் செய்தது. விடுதலைப் புலிகளை பொலிஸார் தேடிப் பிடிக்குமாறும் இத்தீவிர வேட்டைக்கு இராணுவத்தினரும் உதவி புரிய வேண்டுமென்றும் ஜனாதிபதி ஜயவர்த்தன அழைப்பு விடுத்தார். மறுபுறத்தில் சித்திரவதைக்குப் பேர் போன ஒரு துரோகி ஒழிந்தது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குதூகலத்தை ஏற்படுத்தியது.●





## 25.4.78

## விடுதலைப் புலிகள் உரிமை கோருகிறார்கள்.

இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையையும் அவரது கோஷ்டியினையும் அழித்தமைக்கும், அதற்கு முன்னைய பொலிஸ் அதிகாரிகள், தமிழ்த்துரோகிகள் கொல்லப்பட்டதற்கும் முதல் தடவையாக விடுதலைப்புலிகள் இயக்கம் 1978 ஏப்ரல் 25ம் திகதி உரிமை கோரியது. விடுதலைப்புலிகள் உரிமைகோரி விடுத்த அறிக்கையினை இலங்கைப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. இதனூடாக புலி இயக்கம் மக்கள் மத்தியில் பிரபல்யமாகியது. ஆயுதப் போராட்டத்தின்மூலம் தமிழீழத் தாயகத்தினை மீட்டெடுக்கும் இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணிக்கும் புரட்சிகர சக்தியாக எமது இயக்கம் தன்னை உலகிற்குப் பிரகடனம் செய்தது.●

## விடுதலைப் புலிகள் இயக்கத் தடைச்சட்டம்

தமிழர்கள் மத்தியில் புரட்சிகரத் தலைமறைவு இயக்கம் ஒன்று உருவாகியிருப்பதையிட்டு சிங்கள இனவாத அரசு பேரச்சம் கொண்டது. இந்தத் தலைமறைவு இயக்கத்தை அழிக்கும் திட்டத்தில் அரசு துரிதமாகச் செயற்பட்டது. 1978ம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ''**தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் இதுபோன்ற அமைப்புகளைத் தடை செய்தல்**'' சட்டம் என இது அழைக்கப்பட்டது. இக்கொடூர சட்டம் விடுதலைப்போராளிகளை அழிப்பதற்கு பாதுகாப்புப்படைகளுக்கு சகலவிதமான அதிகாரங்களையும் வழங்கியது. கண்மூடித்தனமாக இளைஞர்.

**தடைசெய்யப்பட்ட இயக்க உறுப்பினர்**

**ஆதரவாளர் சொத்துக்கள் பறிமுதலாகும்**

**7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் உண்டு**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

25th April 1978

**TO WHOM IT MAY CONCERN**

The founder name of the organisation Tamil NEW TIGERS (T.N.T.) was changed on 5-5-76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P. Organiser Northern region. Shot Dead.
2. Mr. N.Nadarajah (Proprietor Petrol Garage, Urumpirai, and S.L.F.P. Organiser Kopay (Bombed)
3. Mr. A. Karunanithi (C.I.D. Police K.K.S.) Shot dead.
4. Mr. Shanmuganathan (C.I.D. Police. K.K.S.)Same day shot dead.
5. Mr. Shanmuganathan (C.I.D. Police V.V.T.)
6. Mr. Thangarajah (Sec. of the former S.L.F.P. M.P. Nallur Mr. Arulampalam)
7. Mr. C. Kanagaratnam (MP for Pottuvil former T.U.L.F. and present U.N.P.)
8. Mr. Bastiampillai (C.I.D. Inspector of Police)
9. Mr. Perampalam (C.I.D. Sub- Inspector of Police)
10. Mr. Balasingam (C.I.D. Sergent of Police)
11. Mr. Siriwardene (C.I.D. Police Driver).

The Bastiampillai Party came in search of LIBERATION TIGERS of TAMIL EALAM about 6 a.m. on 7th April, 1978 with S.M.G., shot gun, Revolvers and Pistol, and attacked Tigers but the Tigers destroyed them without any death or body injury to Tigers and the car was also destroyed.

No other groups, Organisation or Individuals can claim this death. Serious action will be taken against those who claim the above other than Tigers in Ceylon or Abroad.

We are not responsible for Past robberies of any kind.

Secretary
CENTRAL COMMITTEE

T.U.L.F - Tamil United Liberation Front.
U.N.P. - United National Party
S.L.F.P. - Sri Lanka Freedom Party.
K.K.S - Kankesanturai.
V.V.T - Valvetiturai.
C.I.D - Criminal Investigation Department.
M.P - Member of Parliament.

*Tigers claim their armed actions*

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

களைக் கைது செய்யவும், விசாரணை இல்லாமல் தடுப்புக்காவலில் நீண்ட காலம் வைத்திருக்கவும், மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யவும், கொல்லவும் இந்தக் கொடுமையான சட்டம் இடமளித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகச் சந்தேகப்படக்கூடிய எந்த நபரதும் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்வதற்கு இந்தச் சட்டம் இடம் தந்தது. கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின்கீழ் பாரதூரமான குற்றமாகக் கருதப்படும்:

(அ) தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் தொடர்பு அல்லது ஈடுபாடு கொண்டிருக்கிறார் என்றோ, அல்லது இந்த இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கிறார் என்றோ இனங்காட்டத்தக்க வகையில் ஒருவர் ஏதாவது சீருடை அணிந்திருப்பது, குறியீடு அல்லது அடையாளச் சின்னம் வைத்திருப்பது,

(ஆ) இந்த இயக்கத்துடன் ஏதாவது ஒரு வகையில் அங்கத்தவராக, ஆதரவாளராக, அல்லது தொடர்புள்ளவராக ஈடுபட்டிருப்பது அல்லது இத்தகைய அமைப்பிற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டுவது அல்லது அத்தகைய கூட்டத்தில் பங்கு கொள்வது,

(இ) இத்தகைய இயக்கத்திற்கு ஆட் சேகரிப்பது, நிதியுதவி செய்வது, நிதி சேர்த்துக் கொடுப்பது, அல்லது வேறு உதவிகளைச் செய்வது,

(ஈ) இந்த இயக்கத்தைச் சேர்ந்த யாராவது ஒரு அங்கத்தவருக்குப் புகலிடம் வழங்குவது, மறைத்து வைத்திருப்பது, அல்லது ஏதாவதொரு வழியில் உதவி புரிவது.

தமிழ் மக்கள் எமது புரட்சிகர இயக்கத்திற்கு எந்தவிதமான ஆதரவையும் வழங்கவிடாது தடுப்பதே இந்தச் சட்டத்தின் மிகமுக்கிய நோக்கமாகும். பரந்த மக்கள் மத்தியிலிருந்து எங்களை அந்நியப்படுத்த இச் சட்டம் முனைந்தது. ஆனால், அரசு நினைத்ததற்கு மாறாக, இச்சட்டமானது எமது இயக்கத்தைப் பிரபலப்படுத்தியது; எமது இயக்கத்துடன் தொடர்பு கொள்வதில் உள்ள ஆபத்துக்களையும் மீறிக் கொண்டு தமிழ்மக்கள் எங்களுக்குத் தமது நல்லாதரவை வழங்கினார்கள். ●


20-5-1978 VIRAKESARI (DAILY SRI LANKA)

VIRAKESARI

# 'புலி'கள் தடைச் சட்டமூலம் நிறைவேறியது!



MURASOLI (INDIA DAILY)
30.5.1978

## விடுதலைப் புலிகள் பற்றிய செய்திக்கு தடை!

கொழும்பு, மே 27— தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய செய்திகளைத் தணிக்கைசெய்து தடைவிதிப்பதென்று இலங்கை அரசு முடிவெடுத்து அதை அமுலாக்கியுள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## ஸ்ரீலங்கா விமானம் வெடிவைத்து தகர்க்கப்பட்டது



குண்டு வைத்து தகர்க்கப்பட்ட
"அவ்ரோ" விமானம்.

Letter N : Claim /?/78 of 7-9- 78.

TO WHOMSOEVER IT MAY CONCERN

" A LIBERATED STATE OF THAMIL EALAM" is the main objective and sacred mission of our Organisation, THE LIBERATION TIGERS OF THAMIL EALAM, and nothing less,. Let this "Blowing up of the Aircraft" serve as a lesson for all the aggressors who are under the illusion that they can barter our ideal OR arrest our struggle by doling out concessions, whatever they may be.

We are fully aware that we cannot attain an Independent Thamil Ealam through "Blowing up of the Aircraft" alone. But let us declare to the World clearly through this move, that the Thamil Nation has not attained freedom by the promulgation of the NEW CONSTITUTION, which is but a Whimsically changeable, whaitewashed, charter of slavery for us, ostensibly containing questionable concessions.

No other Individuals OR Organisations, other than THE LIBERATION TIGERS OF THAMIL EALAM has the right to claim this move.

Sgd.

CHAIRMAN.

*LTTE claims the blasting*

**7.9.78**

1978ம் ஆண்டு செப்டம்பர் 7ம் திகதி ஜயவர்த்தன அரசு புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தியது. இந்த அரசியல் யாப்பு ஜயவர்த்தனவிடம் சர்வ அதிகாரங்களையும் வழங்கியது. இந்த அரசியல் அமைப்பின் பிரகாரம் அவரே 'அரசின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும், ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும்' விளங்கினர். அமைச்சர்களை நியமிக்கவும், விலக்கவும் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் கூடிய சர்வ அதிகாரத்தையும் இந்த அரசியல் யாப்பு ஜயவர்த்தனவிற்கு வழங்கியது. சிங்கள மொழிக்கும், பௌத்த சமயத்திற்கும் இந்த அரசியற் சட்டத்தில் விசேஷமான அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அதேவேளை தமிழ்மொழி இரண்டாம்பட்ச நிலைக்குத் தள்ளப்பட்டது.

சாராம்சத்தில், சிங்கள—பௌத்த தேசியப் பேரினவாதத்தை இந்த அரசியல் திட்டம் ஸ்தாபனமயப்படுத்தியதுடன் மட்டுமல்லாது, ஸ்ரீலங்கா அரச அமைப்பிலிருந்து தமிழ் மக்களைப் பூரணமாக அந்நியப்படுத்தியது. இவ்வாறு ஜயவர்த்தன பாராளுமன்ற ஜனநாயக அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, பாசிஸ சர்வாதிகார அரசைப் பிரகடனம் செய்தார்.

பாராளுமன்றத்தில் வீற்றிருந்த அரசியற் கட்சியான கூட்டணி இதற்கு எதிராக எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டாமல்—தனது கடமையைச் செய்யத் தவறியது. ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம், இதனை உலகின் கவனத்திற்குக் கொண்டுவர உறுதி பூண்டது. தேசியப் பேரவையில் இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட அதே தினத்தில் இலங்கை 'ஏயர் சிலோனுக்குச்' சொந்தமான ஒரேயொரு பயணிகள் விமானமான 'அவ்ரோ' விமானத்தை நாம் தகர்த்தெறிந்தோம். இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பயணிகள் அனைவரும் வெளியேறியதும் விமானத்தில் வைக்கப்பட்டிருந்த நேரக் குண்டு வெடித்து விமானம் சிதைக்கப்பட்டது. விமானம் தகர்க்கப்பட்ட சில நிமிடங்களிலேயே இந்த விமானத் தகர்ப்புக்கு நாமே பொறுப்பு என்று நாம் உரிமை கோரினோம். எமது இந்த நடவடிக்கை இனவாதத் திமிர்பிடித்த அரசின் முகத்தில் கரிபூசுவதாய் அமைந்தது ; அதே சமயம் தமிழ் விடுதலை இயக்கத்திற்கு இச்சம்பவம் ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. ●

## 5.12.78

1978 டிசெம்பர் 5ம் திகதி திருநெல்வேலியில் அரசுக்குச் சொந்த மான மக்கள் வங்கிக்குள் பட்டப்பகலில் நுழைந்த எமது கெரில்லா வீரர்கள் 12 லட்சம் ரூபாயைப் பறித்தெடுத்தனர். அன்று காலை 10—30 மணிக்கு வங்கிக்குள் மின்னலாய் நுழைந்த எம் வீரர்கள் பொலிஸ் காவலர்களை முகங்கொடுக்க நேர்ந்தது. பொலிஸ் காவலர்களுக்கும் எமது வீரர்களுக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் கான்ஸ்டபிள் கிங்ஸ்லி பெரேரா, கான்ஸ்டபிள் சத்தியநாதன் ஆகிய இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தர் மோசமான நிலையில் காயமடைந் தார். எமது வீரர்கள் அப்போது அங்கு நின்ற ஒரு காரில் ஏறிப் பணத்தைக் கொண்டு சென்றனர். ●

## திருநெல்வேலி வங்கியில் பணம் பறித் தெடுக்கப்பட்டது

**BANK ROBBERS GUN DOWN 2 POLICEMEN**

Rs. 1,18 MILLION HEIST IN NALLUR

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான ஆயுதப் போராட்ட நட வடிக்கைகளால் திகிலடைந்த ஸ்ரீலங்கா அரசு கடுமையான சட்டங்களைப் பிறப்பித்து விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்தது.

1979ம் ஆண்டு ஜூலை 20ம் திகதி ஜயவர்த்தனாவின் இனவாத அரசு, விடுதலைப்புலிகள் தடைச் சட்டத்திற்குப் பதிலாக, படுமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. தென் ஆபிரிக்காவின் மோசமான பயங்கரவாதச் சட்டத்தைவிட ஸ்ரீலங்கா அரசு பிறப்பித்த பயங்கரவாதத் தடைச் சட்டம் கொடூரமானதாகும். சட்ட ஆட்சி என்பதன் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே முரணான அரு வருப்பு மிக்க விதிகளை இந்தச் சட்டம் கொண்டிருந்தது. நீதியின் சகல விழுமியங்களும் அத்துமீறப்பட்டன. இந்தக் கொடூர சட்டம் ஜூரிமார் இல்லாமல் வழக்கு விசாரணையை மேற்கொள்ள அனுமதித்தது; பதினெட்டு மாத காலத்திற்கு ஒரு நபரை எந்த வெளியுலகத் தொடர்பும் இல்லாத நிலையில் தனிமைச்சிறையில் வைக்க இடமளித்தது.

இச் சட்டமானது சந்தேகநபர்கள் எனக் கைது செய்யப்பட்ட வர்களிடம் இருந்து சித்திரவதை மூலம் வலிந்து பெறப்பட்ட வாக்குமூலங் களை சான்றாகப்பாவிக்க நீதிமன்றங்களுக்கு அனுமதி வழங்கியது. எவரு டைய வீட்டுக்குள்ளும் நுழையவோ, தேடுதல் நடாத்தவோ, தாம் விரும் பியபடி எவரையும் கைது செய்யவோ, தடுப்புக்காவலில் வைக்கவோ

## பயங்கரவாதத் தடைச்சட்டமும், அப்பாவித் தமிழ் இளைஞர்களின் படுகொலையும்

**வன்செயல் ஒழிக்கப்பட வேண்டும்!**

**யாழ். கமாண்டருக்கு உத்தரவு!!**

**அரசின் சகல துணைவளங்களைபயன்படுத்தஜனாதிபதி ஆணை**

(நமது நிருபர்)

எதிர்வரும் டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர், நாட்டிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்செயல் அச்சுறுத்தற் சம்பவங்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டு மாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் ஏக கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் ரி. ஐ [illegible] துங்காவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## இராணுவம் மீது முதல் தாக்குதல்

**15.10.81**

1981ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரிகேடியர் வீரதுங்க மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்று, ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்ருர். பிரிகேடியர் வீரதுங்க வடக்கிலே இராணுவ ஒடுக்கு முறையையும் வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டு ஸ்ரீலங்கா அரசுக்கு ஆற்றிய 'சேவைகளை'க் கௌரவிக்குமுகமாகவே இவருக்கு இந்தப்பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் பிரிகேடியர் வீரதுங்க இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற தினத்தன்று, 1981ம் ஆண்டு அக்டோபர் 15ம் திகதி லெப்டினன்ட் சார்லஸ் அன்ரனி (சீலன்) தலைமையில் விடுதலைப்புலிகளின் தாக்குதற் படையினர் யாழ்ப்பாணத்தில் காங்கேசந்துறை வீதியில் இராணுவ ஜீப் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினர். விடுதலைப்புலிகளின் இந்தத் தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஹேவவாசம், இராணுவச் சிப்பாய் திஸ்ஸர ஆகிய இரண்டு இராணுவப் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் எதிரிகளின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஸ்ரீலங்கா இராணுவப் படைக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய முதல் கெரில்லாத் தாக்குதல் இதுவாகும். இச்சம்பவம் தமிழீழ விடுதலை இயக்கத்துடன் நாம் கூட்டுறவு கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது. •

## கொரில்லா தாக்குதல்கள் தீவிரமடைகின்றன

தீவைப்பால் அழிக்கப்பட்ட யாழ் பொது சன நூலகத்தின் தோற்றம்.



1981ம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான அரசவன்முறை மோசமாகியது. 1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி சிங்கள இராணுவப் படைகளும் ஐக்கிய தேசியக் கட்சிக் காடையர்களும் சேர்ந்து கொண்டு யாழ் நகரை எரித்து வெறியாட்டம் நடத்தினர். அரச பயங்கரவாதமானது வெறிகொண்ட வன்முறையாக வெடித்தது. கொலையும் கொள்ளையும் தீ வைப்பும் தாராளமாக நடந்தன. நூற்றுக்கணக்கான கடைகள் எரிந்து சாம்பலாகின; யாழ் சந்தை தீப்பற்றி எரிந்தது; "ஈழநாடு" பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது; மதிப்பிடமுடியாத அரிய நூல்களைக் கொண்ட யாழ் பொதுநூல் நிலையம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. தமிழினத்தின் மீதான கலாச்சாரப் படுகொலைத் திட்டமாக இது அமைந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த வன்முறையைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் அரசின் ஆயுதப்படையினரும் சிங்கள காடையர்களும் தமிழர்களுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். நூற்றுக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை

செய்யப்பட்டனர்; ஆயிரக்கணக்கானோர் வீடிழந்தனர்; தமிழர்களின் சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. இவ்வாறு, தமிழ்மக்களின் பிணங்கள்மீது அரசபயங்கரவாதம் கோரதாண்டவமாடியது அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க அடக்கு முறையாளனை எதிர்த்து அழிக்கும் தமிழ் மக்களின் வைராக்கியமும் திடங்கொண்டது. ஒடுக்குமுறை அதன் எதிர்ப்பு முறைக்குத் தளம் அமைத்தது. இராணுவ அட்டூழியத்தாலும் வன்முறையாலும் தமிழ் மக்களை அடிபணியச் செய்துவிட முடியாது என்பதனை சிங்கள இனவாத அரசுக்கு உணர்த்துவதென விடுதலைப்புலிகள் திடங் கொண்டனர். இந்தப் பின்னணியிலே விடுதலைப்புலிகள் தமது கெரில் லாத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர். •

**2.7.82**

1982 ஜுலை 2ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பதினாறு மைல் தொலைவில் உள்ள நெல்லியடியில் ரோந்து சென்று கொண்டிருந்த பொலிஸ் படையின் மீது எமது கெரில்லாப் போராளிகள் மின்னல் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் நான்கு பொலிஸ்காரர்கள் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மூன்று பொலிஸ்காரர்கள் படுகாயமுற்றனர். பொலிஸ் படையினரிடமிருந்த ஆயுதங்களையும் எமது வீரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். எமது வீரர்களுக்கு இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. இத்தாக்குதலில் பின்வரும் பொலிஸ்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1. பொலிஸ் கான்ஸ்டபிள் குணபால
2. பொலிஸ் கான்ஸ்டபிள் மல்லவராச்சி
3. பொலிஸ் கான்ஸ்டபிள் அருந்தவராஜா
4. பொலிஸ் ஜீப் சாரதி ஆரியரட்ன •


**29.9.82**

தனது ஐந்து ஆண்டுகால ஆட்சியில் பயங்கரவாதத்தையும் ஒடுக்குமுறையையும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட இனவெறியன் ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் மேற்கொள்ள முதல் தடவையாகத் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். சந்தர்ப்பவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியினர்



நெல்லியடித் தாக்குதலைத் தலைமை தாங்கி நடத்தியவரும், 27-11-82ல் தியாகமடைந்தவருமான லெப்டினன்ட் எஸ். சத்தியநாதன் (சங்கர், சுரேஸ்)

## நெல்லியடியில் பொலீஸ் மீது தாக்குதல் 4 பொலீசார் கொல்லப்பட்டனர்



## கடற்படையின் மீது தாக்குதல் முயற்சி


30—9—82

# காரைநகர் பாலத்தில் வெடித்த ஐந்து குண்டுகள்!

## ஆறு மைல் தூர மக்களை கிலி கொள்ளச் செய்தது!

'ஜெனறேற்றர்' 'வயர்'களை கடற்படை கண்டுபிடிப்பு; ஐந்துமணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)


காரைநகர்...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam

ஜனதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்திருந்தபோதிலும் பகிஷ்கரிப்பினை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யத் தவறியதால் ஒருவகையில் ஜயவர்த்தனவிற்கு மறைமுகமான ஆதரவு நல்கினர். தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைபிடித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது திட்டவட்டமான எதிர்ப்பைக் காட்டச் செயலில் இறங்கியது.

ஜயவர்த்தன யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அதே தினத்தன்று, 1982 செப்டம்பர் 29 திகதி, பொன்னலை பாலத்திற்கருகில் வரிசையாக வந்து கொண்டிருந்த கடற்படை வாகனங்களைச் சிதைத்து அழிக்க எமது கெரில்லா வீரர்கள் முயற்சி மேற்கொண்டனர். எம் வீரர்கள் வைத்த நிலக்கண்ணி வெடித்து பாலத்திற்கு பெரும் சேதம் விளைவித்த போதும் கடற்படையினரின் வாகனங்கள் சேதம் ஏற்படாது மயிரிழையில் தப்பிக் கொண்டன.

## சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல்



சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி.

**27.10.82**

யாழ்ப்பாணத்தின் பெரியதும், கூடிய பாதுகாப்புக் கொண்டதும், எப்போதும், உஷார் நிலையில் வைக்கப்பட்டுமிருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின்மீது எமது கெரில்லா அணியினர் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் இலங்கை அரசையே கதிகலங்கச் செய்த மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கையாகும். இந்தத் தாக்குதலை அடுத்து வடமாகாணத்தின் பல பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன; வடக்கின் பொலிஸ் நிர்வாகம் ஸ்தம்பித்தது. மிக நுட்பமாகத் திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட இந்த அதிரடித் தாக்குதல் லெப்டினன்ட் சார்ல்ஸ் அன்ரனி (சீலன்)யின் தலைமையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

1982 அக்டோபர் 27ம் திகதி அதிகாலையில் எமது கெரில்லா தாக்குதற் பிரிவினர் ஒரு மினிபஸ்ஸைக் கடத்திவந்து பொலிஸ் நிலையத்தின் முன்னல் இறங்கி மின்னலாய் செயற்பட ஆரம்பித்தனர். கெரில்லா அணியின் ஒரு பிரிவு யாழ்—கண்டி பிரதான பாதையின் போக்குவரத்தினை முழுமையாகத் துண்டித்துவிட்ட அதே சமயம், நவீன ஆயுதங்கள் சகிதம் தாக்குதல் சீருடையில் எமது கெரில்லா அணியின் இன்னொரு பிரிவினர் பொலிஸ் நிலையத்தின் வளவுக்குள் சடுதியாக நுழைந்தனர். காவலில் நின்று கொண்டிருந்த பொலிஸ் காவலர்கள் எமது கெரில்லா வீரர்களின் நடமாட்டத்தை அவதானித்ததும் இயந்திரத் துப்பாக்கி வேட்டுகளை பொழிந்து

தமிழீழ ஆவணக்காப்பகம் Archive

கொண்டு சடுதியாகச் செயலில் இறங்கினர்கள் எமது வீரர்கள். ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மற்றவர்கள் காயத்துடன் தப்பி ஓடிவிட்டார்கள். பின் பிரதான கட்டடத்திற்குள் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தவாறு எமது வீரர்கள் பொலிஸ் நிலையத்தையே ஆக்கிரமித்துக் கொண்டனர். ஆயுதத் தளவாடங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சிய அறை முதலில் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப் பட்டனர். கைக்குண்டுகளை வீசி ஆயுதக் களஞ்சிய அறையைத் தகர்த்து எமது வீரர்கள் ஆயுதத் தளவாடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஒரு பிரிவினர் ஆயுதக் களஞ்சிய அறையைத் தம்வசமாக்கிக் கொண்ட அதே சமயத்தில் மற்ற பிரிவினர் மேல் மாடியை ஆக்கிரமித்தனர். மேல் மாடியில் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமுற்றதுடன் இன்னுமொரு பொலிஸ் அதிகாரி மாடியிலிருந்து கீழே குதித்து, தனது காலை முறித்துக் கொண்டார். கதவுக்குப் பின்னல் ஒளிந்திருந்த ஒரு பொலிஸ்காரன் துப்பாக்கியால் சுட்டதில் எமது இரண்டு போராளிகள் காயமுற்றனர்.

லெப்டினன்ட் சீலனும் இந்தக் கெரில்லாத் தாக்குதலில் காயமுற்றார். காயமடைந்தவர்கள் மினிபஸ்ஸில் பாதுகாப்புடன் வெளியில் கொணர்ந்து சேர்க்கப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக வெளியேறினர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது நடைபெற்ற தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கந்தையா, கருணைநந்தன், பொலிஸ் சாரதி திலகரட்ன ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமடைந்தனர். மற்ற பொலிஸ்காரர்கள் பீதியில் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடி விட்டனர். ஆயுதக்களஞ்சிய அறையிலிருந்து 19 ரிப்பீட்டர் துப்பாக்கிகள், ஒன்பது 303 ரைபிள்கள், இரண்டு இயந்திரத்துப்பாக்கிகள், இரண்டு துவக்குகள், ஒரு சுழல் துப்பாக்கி ஆக 33 ஆயுதங்களையும் பெருந்தொகைத் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.●

லெப்டினன்ட் லூகாஸ் சாள்ஸ் அன்ரனி
(ஆசீர், சீலன்)



## அரச பயங்கரவாதி சுட்டுக் கொலை

**18.2.83**

1983 பெப்ரவரி 18ம் திகதி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தனவும் அவரது ஜீப் சாரதி ராஜபக்ஷவும் விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்

jpg234744421- [25]19.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பட்டனர். இனவெறி பிடித்த இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தன பருத்தித் துறையில் நடைபெறும் பொலிஸ் அட்டூழியங்களுக்குப் பேர் போனவர். அவரைச் சுட்டுக் கொன்றமை உள்ளூர் மக்களுக்குப் பெரும் மனத்திருப்தியை ஏற்படுத்தியது. •

## புலிகளால் யாழ் கூட்டுறவுச்சங்க ஊழல் அம்பலம், கூட்டணி பா.உ. தண்டிக்கப்பட்டார்



மு. ஆலால சுந்தரம்

**22.2.83**

விடுதலைப்புலிகளின் உறுதியான ஆயுதப் போராட்டமும் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளுக்கிருந்த அபிமானமும் ஆதரவும் பிற்போக்குவாதத் தமிழ்ப் பாராளுமன்றவாதிகளுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மக்களின் அரசியல் கிளர்ச்சியானது ஆயுதப் போராட்டப்பரிமாணத்தை அடைந்து விட்டது என்பதனையும் தமது கட்சி அரசியல் ரீதியில் மக்கள் மத்தியில் செல்லாக்காசாக மாறி விட்டது என்பதனையும் உணர்ந்த கூட்டணியின் தலைமைப்பீடம் எமது ஆயுதப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது. இந்த நச்சுப் பிரச்சாரத்தை முன்னின்று நடத்தியவர் கோப்பாய் எம்.பி.யாக தமிழர் விடுதலைக் கூட்டணியால் நியமனம் பெற்ற எம். ஆலாலசுந்தரமாவார். எமது ஆயுதப் போராட்டப் பாதையைக் கண்டித்து இவர் பொதுக்கூட்டங்களிலேயே உரையாற்றிய போது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் பத்திரிகைகளும் இவருடைய இத்தகைய உரைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கின. எமது ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக அவ்வாறு அவர் கூட்டங்களில் உரையாற்றினரா என்று நாம் வினவியபோது தான் அவ்வாறு எங்கும் பேசவில்லை என்று அவர் பதில் கூறினர். அப்படியானல் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை மறுத்து அறிக்கை வெளியிடுமாறு நாம் அவரைக் கேட்டபோது அவர் அதற்கு இணங்கினராயினும் அவ்வாறு எந்த அறிக்கையையும் அவர் வெளியிடவில்லை.

இதே சமயத்தில், யாழ் கூட்டுறவுச் சங்கத்தில் பொதுப் பணத்தைக் கையாடல் போன்ற மோசமான ஊழல்கள் நடைபெறுவதுபற்றிய திட்டவட்டமான சான்றுகள் எமக்குக் கிடைத்தன. திரு. ஆலாலசுந்தரமே ஊழல் மலிந்த இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தார். யாழ் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்றுவரும் ஊழல்களைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டி, இத்தகைய ஊழல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தலைவரைக் குற்றஞ்சாட்டி நாம் பொது அறிக்கையினை வெளியிட்டோம். யாழ் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்ற மோசடித்தனமான கொடுக்கல் வாங்கல்கள்,

கூட்டுறவுச் சங்கப் பொருள்களைத் தவறுகக் கையாடியமை போன்ற ஊழல்களை எல்லாம் விபரமாக அந்த அறிக்கை அம்பலப்படுத்தியது. ஆலாலசுந்தரத்தின் தலைமையில் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்ற ஊழலை அறிந்து யாழ் பொதுமக்கள் திகைப்படைந்தனர். தங்கள் ஊழல் அம்பலப்படுத்தப்பட்டதும் பீதியுற்ற ஆலாலசுந்தரமும், இந்த ஊழலில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளும் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கு வழக்குப் பேரேடுகளைத் திட்டமிட்டு எரித்து விட்டு விபத்துக்காரணமாக அவை எரிந்துவிட்டன என்று கூறினர்கள். இந்த ஊழலுக்கும் தனக்கும் எந்தச்சம்பந்தமும் இல்லை என்று நிறுவும் வியர்த்தமான முயற்சியில் ஆலாலசுந்தரம் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார். இச்சந்தர்ப்பத்தில்தான் எமது இயக்க அணியினர் அவரை அவரது வீட்டிலேயே சென்று சந்தித்து, அவரது சமூக விரோதச் செயல்களுக்கான தண்டனையாகவும் எச்சரிக்கையாகவும் அவரது காலில் துப்பாக்கியால் சுட்டனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, கூட்டுறவுச் சங்கத்தின் பல நிர்வாகிகள் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தனர். •

## உமையாள்புரத்தில் துப்பாக்கிச் சண்டை

**4.3.83**

1983 மார்ச் 4ம் திகதி பரந்தனுக்கருகே உமையாள்புரத்தில் இராணுவ வாகனங்கள் மீது எமது கெரில்லா வீரர்கள் ஒளிந்திருந்து திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் சிங்கள இராணுவப்படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் நேரடித் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். ஒரு மணித்தியாலம் நடைபெற்ற கடுமையான போராட்டத்தின் பின் சிங்கள இராணுவப் படையினர் காயமடைந்தவர்களுடன் பின்வாங்கி ஓடிவிட்டனர். இந்தத் தாக்குதலில் இராணுவக் கவசவண்டி ஒன்று சேதமாக்கப்பட்டது. மாங்குளம் இராணுவ முகாமைச் சேர்ந்த ஆர்.எம்.ஏ. சோமசிரி, எம்.என். பெரேரா, ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த எச்.ஈ. ஆரியதிலக, டபிள்யு, ஜி. குணதிலக்க, எஸ். சோமாராம ஆகிய இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலிகளின் தரப்பில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. •




## யாழ் அரசு செயலகம் தகர்ப்பு அரச வாகனங்கள் தீக்கிரை

**2.4.83**

1983 ஏப்ரல் 2ம் திகதி வடமாகாணத்தில் 'பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக யாழ் அரசாங்க அதிபர் "பாதுகாப்பு மாநாடு"

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கட்டடங்கள் சேதம், ஜீப்புகள் தீக்கிரை

## யாழ். செயலகத்தில் குண்டுகள் வெடித்தன!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தினால், செயலகத்திலுள்ள கட்டடங்களின் சில பகுதிகள் கடுமையான சேதத்துக்குள்ளானதுடன், செயலகத்துக்குச் சொந்தமான ஜீப் வண்டிகளும் முற்றாக எரிந்துள்ளன.

ஒன்றிணைக் கூட்டினர். உண்மையில் இந்த மகாநாட்டின் முக்கிய நோக்கம் விடுதலைப்புலிகளை அழித்து ஒழிப்பதற்கான ஒரு செயல் திட்டத்தை உருவாக்குவதாகும். இந்த மகாநாட்டில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் விஜயக்கோன் தலைமை வகிப்பதென்றும், இராணுவ, பொலிஸ் படைகளின் உயரதிகாரிகள் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் வேறு சில எம்.பி.க்களும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவும் தீர்மானித்திருந்தனர். அரச பயங்கரவாதிகளும் அரசியல் சந்தர்ப்பவாதிகளும் கலந்துகொள்ளும் ஒரு உயர்மட்ட மகாநாடு இதுவாகும். இந்த நாசகார நோக்கம் கொண்ட மகாநாட்டின் மூலம் எமது இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை அழித்துவிட முடியாது என்பதை சிங்கள இனவாத அரசுக்கும் அதன் ஏஜண்டுகளுக்கும் உணர்த்த வேண்டும் என்று நாம் முடிவு செய்தோம்.

*1983* ஏப்ரல் 2ம் திகதி மகாநாடு ஆரம்பமாவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் எமது கெரில்லா வீரர்கள் மகாநாடு நடைபெறவிருந்த யாழ் கச்சேரி செயலகக் கட்டடத்தைக் குண்டு வைத்து தகர்த்தனர். மகாநாட்டு மண்டபத்தையும் செயலகக் கட்டடத்தின் வேறு சில பகுதிகளையும் வெடிகுண்டுகள் மோசமாகச் சேதமடையச் செய்தன. நிர்வாகப் பகுதியின் அலமாரிகள் சிதறித் தூளானதுடன் அரசாங்க தஸ்தாவேஜுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. பல அரசாங்க வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பலத்த பாதுகாப்புக்குள் இருந்த கட்டடத்தின்மீது விடுதலைப்புலிகள் குண்டு வைத்து தாக்கியமை அரசாங்கத்தைத் திகிலடையச் செய்தது. பாதுகாப்பு மகாநாடு வேறிடத்திலேயே பின்பு நடைபெற்றதெனினும் நாம் அரசுக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்திவிட்டோம்.●

## உள்ளூராட்சி தேர்தல் பகிஸ்கரிப்பு

1983 மே மாதம் 18ம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதென அரசு அறிவித்திருந்தது. தமிழீழத்தில் ஒடுக்குமுறையையும் பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்ட இனவாத அரசை நிராகரிப்பதற்காக உள்ளூராட்சித் தேர்தலைப் பூரணமாகப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப்புலிகள் மக்கள் மத்தியில் தீவிர அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் தேர்தல் பகிஷ்கரிப்புத் தொடர்பாக விடுத்த

அறிக்கையில் தமிழீழ மக்கள் ஸ்ரீலங்காவின் தேர்தல் மாயையிலிருந்து விடுபடுமாறும், ஸ்ரீலங்காவின் சகல நிர்வாகங்களையும் நிராகரிக்குமாறும், வெகுஜன ஆயுதப் போராட்டத்திற்கு அணிதிரளுமாறும் வேண்டுகோள் விடுத்தார். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தமிழீழக் கோஷத்தை முன் வைத்து, சிங்கள அரசின் ஆட்சியதிகாரத்திற்கு முண்டு கொடுக்கும் பிற்போக்கு அரசியற் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இவர் கடுமையாகச் சாடினர். ●

## 29.4.83

## ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் சுட்டுக் கொலை

தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் 'அரச பயங்கரவாத ஓநாயின் வாயிலிருந்து' வடிந்து கொண்டிருக்கும் குருதி கூடக்காயாத நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் எம் மக்களில் ஒரு சிலரின் வாக்குகளை வெற்றி கொள்வதன் மூலம் வெளியுலகத்திற்கு அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முனையும் சிங்கள இனவாத அரசிற்குச் சார்பாக இனியும் இங்கு இயங்கிக் கொண்டிருக்கும் துரோகிகளின் செயல்களை எம்மால் எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது'' என்று நாம் விடுத்த கடுமையான எச்சரிக்கையையும் புறக்கணித்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சகல சந்தர்ப்பவாத அரசியற் கட்சிகளும் இத்தேர்தலில் பங்குகொள்ள முனைந்தன. இனவாத சிங்கள அரசாங்கத்தை ஆதரிக்கும் சகல தமிழ்த் துரோகிகளுக்கும் எச்சரிக்கையாக, 1983 ஏப்ரல் 29ம் திகதியன்று ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய ஆதரவாளர்கள் மூன்று பேரை எமது கெரில்லாப் போராளிகள் சுட்டுக்கொன்றனர். இவர்களில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஈ.வி. இரத்தினசிங்கம், சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.எஸ். முத்தையா ஆகிய இருவரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக நின்றனர். எஸ்.எஸ். இராஜரெத்தினம் என்ற மூன்றாவது நபர் நீண்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராகச் செயற்பட்டு வந்தவராவார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் அமைப்பாளரான கே. கணேசலிங்கத்தின் மெய்க்காப்பாளருமாவார். இந்த இராணுவ நடவடிக்கையின் நேரடி விளைவாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றதுடன் பல தமிழர்கள் ஐ.தே. கட்சியிலிருந்தும் ராஜினாமாச் செய்தனர்.

**ஐ.தே.க. ஆதரவாளர்கள் மூவர் சுட்டுக் கொலை!**

**பருத்தித்துறை, வல்வை, சாவகச்சேரியில் சம்பவம்!!**

ஐக்கியதேசிய கட்சியின் ஆதரவாளர்கள் மூவர் இனந் தெரியாத நபர்களினால் நேற்றுச் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அப்படி இருந்தும் ஒரு சிலர் தொடர்ந்தும் ஐ.தே. கட்சிக்கு
முண்டு கொடுத்து சிங்கள இனவாத அரசின் தரகர்களாக செயல்பட்டு
வந்தனர். இவர்கள் அரசிடமிருந்து கைத்துப்பாக்கியும் பெற்று பாதுகாப்
பாக செயல்பட்டு வந்தனர். இவர்களில் யாழ் நகரத்தில் வசித்து வந்த
திலகர், குருநகரைச் சேர்ந்த இராசசூரியர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.
இந்தத் துரோகிகளுக்கு எமது இயக்கத்தால் முறையே 3.6.83, 11.8.83
திகதிகளில் மரணதண்டனை அளிக்கப்பட்டது. இந்நடவடிக்கை காரணமாக
பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்பான ஐ.தே. கட்சியின் வளர்ச்சியை
தமிழீழத்தில் இருந்து முற்றாக முறியடித்தோம். •

## விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஸ்கரிப்பு இயக்கம் பூரண வெற்றி பெற்றது

**18.5.83**

எமது இயக்கம் நடத்திய தீவிர அரசியற் பிரச்சாரத்திற்குச் செவி
சாய்த்த தமிழ் மக்கள், குறிப்பாக வடமாகாண மக்கள், 1983
மே மாதம் 18ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலைப்
பூரணமாகப் பகிஷ்கரித்தனர். தமிழ் மக்களின் அரசியல் வரலாறு முன்
னென்றுமே கண்டிராத இந்தப் பூரண தேர்தல் பகிஷ்கரிப்பு விடுதலைப்
புலிகள் இயக்கத்திற்கு அரசியல் ரீதியில் கிடைத்த மகத்தான வெற்றி
என்றே கூற வேண்டும். விடுதலைப்புலிகளின் வேண்டுகோளை நிராகரித்துத்
தேர்தலில் நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சகிக்க முடியாத அவ
மானத்தை இது தேடித்தந்தது; கூட்டணி தமிழ் மக்களின் மத்தியில்
செல்லாக்காசு என்பது கேள்விக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது. தேர்தலில்
வாக்களிக்குமாறு கூட்டணி விடுத்த வேண்டுகோளை வடமாகாணத்தில்
90 விதமான மக்கள் பூரணமாக நிராகரித்தனர். இத்தேர்தலில் தமிழர்
விடுதலைக் கூட்டணி பருத்தித்துறையில் 1% வீதமான வாக்குகளையும் வல்
வெட்டித்துறையில் 2% விகிதமான வாக்குகளையும் சாவகச்சேரியிலும்
யாழ்ப்பாணத்திலும் பத்து வீதத்திற்கும் குறைந்த வாக்குகளையுமே பெற்றது •

| | வல்வெட்டித் துறை | பருத்தித் துறை | யாழ்நகர் | சாவகச் சேரி |
|---|---|---|---|---|
| பகிஸ்கரித்தவர்கள் | 98% | 99% | 85% | 85% |
| வாக்களித்தவர்கள் | 2% | 0.75% | 13% | 14% |

jpg234744421- [30]25.jpg

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## கந்தர் மடத்தில் துப்பாக்கிச் சண்டை

**18.5.83**

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற **1983** மே 18ம் திகதியன்று வாக்களிப்பு முடிவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னதாக நல்லூர் கந்தர்மடத்தில் தேர்தல் சாவடிக்குக் காவல் நின்ற இராணுவ, பொலிஸ் படைகளின் மீது எமது கெரில்லா வீரர்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். பதினைந்து நிமிடம் நீடித்த இத்தாக்குதலில் இராணுவப் படையைச் சேர்ந்த கோப்ரல் ஜயவர்த்தன அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும், இராணுவப்படையைச் சேர்ந்த கோப்ரல் பண்டாரவும், கான்ஸ்டபிள் திலகரட்ண, கான்ஸ்டபிள் பிரேம தாச ஆகிய இரண்டு பொலிஸ் படையினரும் படுகாயமுற்றனர். இராணுவப் படையிடமிருந்த தானியங்கு ரைபிள்களையும் எமது வீரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். எமது வீரர்களின் தரப்பில் எந்த சேதமும் ஏற்படவில்லை. எமது வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலையடுத்து, அரசாங்கம் அவசர காலச் சட்ட விதிகளை அமுலுக்குக் கொண்டு வந்தது. 'பயங்கரவாதிகள்' எனச் சந்தேகிக்கும் எவரையும் கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளவும், பிரேத பரிசோதனை இல்லாமலும், நீதிமன்ற விசாரணை எதுவுமின்றியும், சுடப் பட்ட நபர்களின் சடலங்களைப் புதைக்கவும் இராணுவத்திற்கு இந்தப் புதிய அவசரகாலச் சட்டவிதிகள் அதிகாரங்களை வழங்கியது. ●

## திருநெல்வேலி – 13 இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

**23.7.83**

1983 ஜூன் மாதம் இலங்கையில் அரச பயங்கரவாதம் வெறி பிடித்தாடியது. கண்ட இடத்தில் யாரையும் சுட்டுத்தள்ளும் அதிகாரம் வழங்கப்பட்ட நிலையில் சிங்கள ஆயுதப்படையினர் வவுனியாவிலும் திருகோணமலையிலும வெறியாட்டம் நடத்தினர். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இப்பிரதேசங்களில் சிங்களவரைப் பெரும்பான்மையினராக்க சிங்கள அரசு பெரும்முயற்சி செய்து வந்தது. வவுனியா நகரை ஆயுதப்படைகள் தீயிட்டு எரித்தன; பல தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். திருகோணமலையில் சிங்களக் காடையர்கள் கூட்டம் இராணுவத்தினதும் கடற்படையினதும் ஆதரவுடன் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைத்தல் ஆகிய நடவடிக்கையில் வெறித்தனமாக ஈடுபட்டனர். திருகோணமலையில் தமிழ் மக்கள் மிலேச்சத்தனமாகப் படு கொலை செய்யப்பட்டனர்; நூற்றுக்கணக்கான வீடுகள் எரித்துச் சாம்ப லாக்கப்பட்டன; தமிழ்க் கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டன. யாழ்ப் பாணத்தில் ஆயுதப்படையினர் இளைஞர்களைச் சுற்றி வளைத்துச் சுட்டுக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



யாழ்ப்பாணத்தில் அரச பயங்கரவாதிகளின் அட்டூழியம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கொன்றனர்; வீடுகள் கொள்ளையிடப்பட்டன; கடைகள் எரிந்து சாம்பலாயின. தமிழ் மக்களைப் படுகொலை செய்து தமிழினத்தையே துவம்சம் செய்யும் அரசின் நாசகாரப் படுகொலைத் திட்டம் செயற்பட ஆரம்பித்து விட்டது. ''தமிழர்களின் உயிரைப் பற்றியோ, தமிழர்கள் எங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றியோ எனக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை'' என்று பிரிட்டிஷ் பத்திரிகை நிருபருக்கு ஜே.ஆர். ஜயவர்த்தன அளித்த பேட்டியில் தெரிவித்த கருத்தானது தமிழர்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருப்பதையே நிரூபணம் செய்தது.

இவ்வாறு சிங்கள இனவாத அரசு தமிழ்மக்கள் மீது கண்மூடித்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. எமது மக்கள் கொடூர இராணுவ ஒடுக்குமுறைக்கு இலக்காகி அழிக்கப்பட்டபோதுதான் இராணுவத்திற்குப் பதிலடி கொடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். அதேவேளை 1983 ஜூலை 15ம் திகதி இராணுவக் கூலிகளால் கொல்லப்பட்டு வீரமரணம் அடைந்த விடுதலைப்புலிகளின் தலைசிறந்த இராணுவத் தலைவர்களில் ஒருவரான லெப்டினன்ட் லூக்காஸ் சார்ல்ஸ் அன்ரனி (சீலன்)யின் ஈடுசெய்ய முடியாத இழப்பிற்குப் பதிலடி கொடுப்பதற்காகவும் இத்தாக்குதலை நாம் திட்டமிட்டோம்.

ஜூலை 23ம் திகதி நள்ளிரவு. திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியில் லெப்டினன்ட் செல்லக்கிளி (அம்மான்)யின் தலைமையில் விடுதலைப்புலிகளின் தாக்குதற்படைப் பிரிவு இராணுவத்திற்கெதிரான திடீர்த் தாக்குதலுக்காகக் காத்து நின்றது. யுத்த சீருடையுடன், நவீனரக ஆயுதங்களுடன் 14 கெரில்லா வீரர்களை உள்ளடக்கிய தாக்குதல் பிரிவு தயார் நிலையில் நின்று கொண்டிருந்தது. பாதையில் நிலக்கண்ணிகளைப் புதைத்து விட்டு, பாதையின் இரு பக்கங்களிலும் எமது வீரர்கள் ஆயுத பாணியினராய் நின்றனர். நள்ளிரவின் போது சிங்கள இராணுவ ரோந்துப் படைப் பிரிவு அந்த இடத்தைக் கடந்து செல்வது குறித்து எமது உளவுத் தகவற் பிரிவிடமிருந்து ஏற்கெனவே தகவல் கிடைத்திருந்தது.

எதிர்பார்த்தது போல மாதகல் முகாமைச் சேர்ந்த பதினைந்து இராணுவத்தினர் ட்ரக் வண்டியிலும் ஜீப்பிலுமாக எமது கெரில்லா வீரர்கள் காத்து நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். குறிக்கப்பட்ட இடத்தை ஜீப் வண்டி தாண்டியதும் திட்டமிட்டிருந்தவாறு நிலக்கண்ணி பயங்கரமாக வெடித்தது. ஜீப் வண்டி தூளாகிச் சிதறியது. பின்னால்


1


2


3




5


6

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



7



8



9



10



11



12



13

வந்து கொண்டிருந்த ட்ரக் வண்டி சடுதியாக நின்றது. பீதியிலும் பயத்திலும் இராணுவப் படையினர் ட்ரக் வண்டியிலிருந்து குதித்துத் தப்பி ஓட முயல்கையில் எமது கெரில்லா வீரர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் தீயுமிழ ஆரம்பித்தன. அதிர்ச்சியிலும் திகிலிலும் அச்சத்திலும் நின்ற இராணுவப் படையினரால் எமது வீரர்களுடன் தாக்குப்பிடித்து நின்று சண்டையிட முடியவில்லை. ஒருவர் பின் ஒருவராக அவர்கள் எமது வீரர்களின் இயந்திரத் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். இராணுவப் படையினரில் சிலர் வாகனத்திலிருந்து குதித்து இறங்கி, ட்ரக் வண்டியின் கீழ் ஒளித்து நின்று தாறுமாறாக எல்லாத் திசைகளையும் நோக்கிச் சுட ஆரம்பித்தனர். ஆனால் எமது இயக்க வீரர்கள் தொடர்ந்து சுட்டுக்கொண்டும் கைக்குண்டுகளை எறிந்தும் நடத்திய துணிச்சல் மிக்க தாக்குதல் எதிரிகளின் துப்பாக்கிகளை வாயடைக்கச் செய்தது.

இராணுவரீதியில் மிகவும் கச்சிதமாகவும் நிதானத்துடனும் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கெரில்லாத் தாக்குதலில் பதின்மூன்று சிங்கள இராணுவப்படையினர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பேர் படுகாயமுற்றனர். “Four Four Bravo” என்று ஆங்கிலக் குறியீட்டால் அழைக்கப்பட்ட இந்தச் சிங்கள இராணுவ ரோந்துப் படையின் கதை இத்தோடு முடிந்தது. விடுதலைப்புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் செல்லக்கிளி இந்தப் போராட்டத்தில் வீர மரணமடைந்தார்.

இத்தாக்குதலில் இறந்த சிங்கள இராணுவப் படையினரின் பெயர் விவரம் பின் வருமாறு,

1. 2ம் லெப்டினன்ட் வாஸ் குணவர்த்தன
2. பிரைவேட் எச்.ஜி. ராஜதிலக்க
3. பிரைவேட் கே.பி. கருணரட்ன
4. கோப்ரல் ஜி.ஆர். பெரேரா
5. பிரைவேட் என்.ஏ.எஸ். மனதுங்க
6. சார்ஜன் எ.ஐ. திலகரட்ன
7. கோப்ரல் ஜி.டி. பெரேரா.
8. பிரைவேட் ஏ.ஜே. விஜேசிரி
9. பிரைவேட் எஸ்.எஸ். அமரசிங்க
10. பிரைவேட் டி.என்.ஏ.டி. மனம்பிட்டிய

11. பிரைவேட் எம்.டி. சுனில்

12. பிரைவேட் ஜி. ரொபர்ட்

13. பிரைவேட் ஏ.ஜே.ஆர். பெர்ணன்டோ

இத்தாக்குதல் சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்தது; ''பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம்'' எனக் கறுவிய அரசாங்கத்துக்கு மிகுந்த அவமானத்தை விளைவித்தது. இருந்தும் இனவாத அரசாங்கம் இத்தாக்குதற் சம்பவத்தைப் பயன்படுத்தி, தான் ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருந்த இனப் படுகொலையை தமிழர்கள் மீது கச்சிதமாக கட்டவிழ்த்து விட்டது. ஜூலை 24ல் இருந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் முன்னெப்பொழுதும் கண்டிராத மூர்க்கத்துடன் வெடித்துக் கிளம்பின. இந்த இனவெறி முழக்கங்கள் நாடெங்கும் எதிரொலித்தன. நூற்றுக்கணக் கான தமிழர்கள் எக்காரணமுமின்றி படுகொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் வீடுகள் எரிக்கப்பட்டன. கொழும்பில் தமிழர் களின் பொருளாதாரத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இத்திட்டம் முழு வதும் இனவாத சிங்கள அமைச்சர்களால் அரசபடைகளின் முழு ஆதரவுடன் அமுல் நடத்தப்பட்டது. ●



லெப்டினன்ட் செல்வநாயகம் (அம்மான் செல்லக்கிளி சந்திரன்)

## விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ அமைப்புக்கள் விரிவடைகின்றன

ஜூலையில் நடைபெற்ற இனப்படுகொலை சிங்கள, தமிழ் மக்களி டையே நிரந்தரமான—ஆழமான பிளவினை ஏற்படுத்திவிட்டது. இந்த இரு தேசிய இனங்களும் ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் இணைந்து வாழலாம் என்பதில் இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் இது முற்றாகத் தகர்த்துவிட்டது. மிலேச்சத்தனமாக, ஈவிரக்கமின்றித் தமி ழர்கள் படுகொலை செய்யப்பட்டதை அவதானித்த தமிழ்மக்கள் தொடர்ந்தும் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வது முடியாத காரியம் என்றும், பிரிந்து போவதே தமிழ் மக்களின் உயிருக்கும் வாழ்க்கைக்கும் உத்தரவாதமளிக்கக் கூடியது என்றும் முடிவு கட்டினர், ஆகவே, அரசே முன்னின்று நடத்திய இவ்வினப் படுகொலைத் திட்டம் தமிழீழக் கோரிக்கையைப் பலப்படுத்தி, புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு வெகுஜன ஆதரவை ஈட்டித்தந்தது. மக்கள் விடுதலைப்புலிகளையே தமது இரட்சகர்களாகக் கருதத் தொடங்கி னார்கள். வெவ்வேறு சமூக மட்டங்களைச் சேர்ந்தோரும் எமது இயக்கத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர். எமது இயக்க அணியினர் பன்மடங்காகப்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பெருகினர். எமது கெரில்லா அணிகளை புரட்சிகர மக்கள் இராணுவமாகக் கட்டி எழுப்பும் எமது அரசியல், இராணுவ அமைப்புகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினோம். 1983 ஜுலையிலிருந்து இந்த ஆண்டின் முற்பகுதிவரை எமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, பாரிய கெரில்லா இராணுவப் பயிற்சித் திட்டங்களை வகுத்தோம். எமது அரசியல், இராணுவ அமைப்புகளையும் விரிவாக்கம் செய்தோம். ●

## குருநகர் இராணுவ முகாம் தகர்க்கப்பட்டது



நிர்மூலமாக்கப்பட்ட குருநகர் இராணுவ முகாம்.

**24.2.84**

யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தின் ஒரு கோட்டையாக விளங்கிய குருநகர் இராணுவ முகாம் 1984 பெப்ரவரி 24ம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளால் வெடிகுண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்புத் தாக்குதலால் முழுக்கட்டடமும் தகர்ந்து விழுந்து தரைமட்டமாகியது. கற்குவியலைத் தவிர ஒரு இராணுவமுகாம் இங்கு இருந்ததற்கான தடயம்கூட இல்லாத அளவுக்கு இம்முகாம் நாச மாக்கப்பட்டது.

குருநகரில் அமைந்திருந்த இந்த இராணுவ முகாம் வடக்கே குடிகொண்டிருந்த சிங்கள இராணுவத்தினரின் முன்னுள் நிர்வாகத் தலைமை யகமாக இயங்கி வந்தது. சிங்கள வெறியரின் சித்திரவதைக்குப் பெயர் போன இடமாகவும் இது விளங்கியது. நூற்றுக்கணக்கான தமிழீழ விடு தலைப் போராளிகள் இந்த இராணுவமுகாமில் வைத்து விசாரிக்கப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதைக்கு ஆளாகினர். 1983 ஜுலை மாதம் விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் பதின்மூன்று இராணுவப் படையினரைச் சுட்டுக் கொன்றதையடுத்து சிங்கள இராணுவத்தினர் இந்த இராணுவ முகாமை விட்டுத் தற்காலிகமாக இடம் பெயர்ந்தனர். இந்த முகாமை விஸ்தரித்து, புதிய அரண்களை நிறுவிப் பாதுகாப்புகள் நிறைந்த ஒரு கோட்டையாக மாற்றியமைப்பதற்குச் சிங்கள இராணுவத் தலைமைப்பீடம் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டியது.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் இந்த முகாமைக் குண்டு வைத்துத் தகர்த்தமை சிங்கள அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. யாழ்நகரின் மத்தியில் பலத்த கண்காணிப்புகள் போடப்பட்டிருந்தும் இச்சம்பவம் நிகழ்ந்தமை அரசுக்குத் திகிலுடன் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது. ●

## சமூக விரோதிகள் ஒழிப்பு

இராணுவ பயங்கரவாதத்தைத் தமிழீழமண்ணில் கட்டவிழ்த்து விடுவதோடும் திருப்தியடையாமல் தமிழ்மக்களைத் தாங்கொணாத துன்பத்திற்குள்ளாக்கும் புதிய தந்திரோபாயத்தையும் சிங்கள இனவாத அரசு கைக்கொண்டது. தமிழீழத்தில் குற்றச் செயல்களைத் தூண்டு வித்து அராஜக நிலையை உருவாக்குவதே இப்புதிய திட்டமாகும். இதன்படி வடக்கில் கொலைஞர்களும் கொடூரக் குற்றவாளிகளும் நான்குமுறை சிறையை உடைத்துக்கொண்டு வெளியேறி நாட்டில் உலவுவதற்கு அரசாங்கமே உடந்தையாக இருந்தது. சிங்களக் காவல் படையினரும் இவ்வாறான சமூக விரோதக் கும்பல்களை வாரியணைத்து வளர ஊக்கம் கொடுத்தனர். சட்டத்தைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு அமைப்பு நிலைகுலைந்துபோன சூழ்நிலையில், இந்த சமூக விரோதக் கும்பல்கள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற தமது கொடூரமான நடவடிக்கைகளால் மக்களைப் பெரிதும் துன்புறுத்தினர். இதில் ஆபத்தான அம்சம் யாதெனில், இச்சமூக விரோதிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது விடுதலைப்புலிகள் என்ற எமது இயக்கப் பெயரையும் வசதியாகப்பாவித்தமையாகும். இந்தச் சமூக விரோதிகள் எமது இயக்கத்தின் பெயரைப்பாவித்து நகை, பணம் ஆகிய வற்றைச் சேகரிக்கவும் முற்பட்டனர்.

குற்றச் செயல்கள் அதிகரித்து, அராஜகம் தலைவிரித்தாடிய போது மக்கள் துன்பங்களை அநுபவிக்க நேர்ந்தது மட்டுமல்ல, அவர்கள் குழப்பமுற்றும் காணப் பட்டனர். மக்களை அதீத விரக்திக்குள் தள்ளி, ஆத்திரத்தை ஏற்படுத்தி, விடுதலை இயக்கங்கள் மீது வெறுப்பை வளர்த்து, விடுதலைப் போராளிகளை மக்களே அரசாங்கத்துக்குக் காட்டிக்கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நயவஞ்சக நோக்கமாகும். இந்நிலையிலே கொடூரமான குற்றச்செயல் புரிவோராக மட்டுமல்லாது, இனத்தையே அரசாங்கத்திற்குக் காட்டிக்கொடுக்க முனையும் துரோகிக ளாகவும் சமூகத்தில் உலவுகின்ற இந்த நாசகாரச் சக்திகளுக்கு எதிராகக் கடும் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் முடிவு செய்தோம்.

இத்தகைய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்ற குற்றவாளிகளைப் பிடித்து வந்து, அவர்களது குற்றச் செயல்களைப்பற்றி விரிவாக விசாரணை செய்து, அவர்களது குற்றங்களுக்கேற்ப நாம் தண்டனை வழங்கினோம். சில கொடூரமான குற்றவாளிகளுக்குப் பகிரங்கமாக மரண

---

விடுதலைப் புலிகள் தமிழீழ LIBERATION TIGERS OF THAMIL EALAM

தமிழீழ விடுதலைப் புலிகள்

**LIBERATION TIGERS OF THAMIL EALAM**

**சமூக விரோதிகளை அழிப்போம்!**

அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழ மக்களின் பரந்து பட்ட ஆதரவுடன் நாம் செயற்பட்டுவரும் இவ்வேளையில், எம்மக்களிடமே கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும், கப்பம்வாங்கியும், இயக்கத்தின் பெயரைச்சொல்லிப் பணம்சேகரித் தும் வரும் சமூக விரோதக் கும்பல்கள் எமது தேசிய விடு தலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கின்றன. விடு தலைப் போராளிகளை ஒடுக்குமுறை அரசிற்குக் காட்டிக்கொடுப் பவர்போல இச் சமூகவிரோதச் செயல்களைச் செய்யும் சமூக விரோதக் கும்பல்களும் துரோகிகளே.

எந்நேரமும் எம்மக்களைநோக்கி ஆயுதமேந்தியபடி தமிழீழ மண்ணில் வலம்வரும் சிறீலங்கா ஆயுதப்படையினரின் கெடு பிடிகளால் நொந்துபோயிருக்கும் எம்மக்களை "வெந்த புண் ணிலே வேல்பாய்ச்சுதல்" போல மேலும் நோகவைக்கும் விதத் தில் இச்சமூகவிரோதக் கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும், இச்சமூகவிரோதிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது, இவர்களை அழித்தொழிப் பதற்கு மக்கள் எமக்குப் பக்கபலமாக அமைவர் என்பது திண்ணம்.

சிறீலங்கா நிர்வாகத்திற்கான சகலதேர்தல்களையும் முற்று முழுதாக நிராகரித்து, நடைமுறையனுபவங்களினூடாக சரி யான போராட்டப்பாதையில், விடுதலைப்போராளி பிரபாகரன் தலைமையில் நாம் தொடர்ந்தும் முன்னேறுவோம்.

வாழ்கதமிழீழம் — அரசியற் குழு, தமிழீழ விடுதலைப் புலிகள்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!**

வெளியீடு. பிரச்சார வெளியீட்டுவாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தண்டனை நிறைவேற்றப்பட்டது ; மற்றவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் இத்தகைய சமூக விரோதிகளைக் கைது செய்து, விசாரணைகளை மேற்கொள்ள பொதுமக்களே தாமாக முன்வந்து எமக்கு உதவியுள்ளனர். இவர்களுக்கு நாம் வழங்கிய தண்டனைகளை அவர்கள் பூரணமாக அங்கீகரிக்கவும் செய்தனர்.

இத்தகைய குற்றச்செயல்கள் ஆழ்ந்த சமூக, பொருளாதாரப் பின்னணியைக் கொண்டன என்பதிலும், எமது சமூக அமைப்பைப் பூரணமாக மாற்றியமைத்தாலொழிய இத்தகைய குற்றச் செயல்களை முழுமையாக நிறுத்தமுடியாது என்பதிலும் நாம் தெளிவு கொண்டிருந்தோம். அரசு உருவாக்க முனைந்த அராஜகநிலையைத் தவிர்க்கவும், குற்றச்செயல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் ஒரு தற்காலிக நடவடிக்கையாகவே இந்த சமூக விரோதிகளுக்கெதிரான எமது கடுமையான தண்டனைகள் அமைந்தன. எமது நடவடிக்கைகள் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதைத் தடுத்தது ; பல கொடூரமான குற்றவாளிகள் பொலிஸ் நிலையங்களிலேயே சென்று தஞ்சம் புகுந்தனர்.

சமூக விரோதிகளுக்கு எதிரான எமது நடவடிக்கைகளை அவதானித்த மக்கள் பல்வேறு சமூகப் பிரச்சனைகளையும் தீர்த்துவைக்க எம்மை அணுகினர். பல சந்தர்ப்பங்களில் சாதி, சமயச் சண்டைகள் ஏற்படுவதனை நாம் நேரடியாகவே தலையிட்டுத் தடுப்பதில் வெற்றி கண்டிருக்கிறோம். தொழிலாளருக்கு உரிய கூலி வழங்குமாறு முதலாளிகளை நிர்ப்பந்தித்து அவற்றை நாம் பெற்றுக் கொடுத்திருக்கிறோம். அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கி, கறுப்புச் சந்தையில் கடை வியாபாரிகள் விற்பனை செய்வதையும் நாம் தடுத்திருக்கிறோம். ●

விமானப்படை உத்தியோகத்தர்களின் ஆள் அடையாள அட்டை.




## விமானப்படையினர் சுட்டுக் கொலை

**20.3.84**

1984 மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சிவிலுடை அணிந்த இரண்டு விமானப் படையினரை எமது விடுதலை வீரர்கள் கோண்டாவிலில் சுட்டுக் கொன்றனர். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை இவர்கள் துப்புத்துலக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாவர். கொல்லப்பட்ட விமானப் படையினரின் பெயர்கள் வருமாறு :

1. ரோகன் ஜெயசேகரா
2. சரத் அனுரசிறீ

## பொலீஸ் படையினர் மீது தாக்குதல் லலித் யாழ் விஜயத்திற்கு எதிர்ப்பு

**25.3.84**

1984 மார்ச் 25ம் திகதி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்கள பொலிஸ் அதிரடிப் பிரிவினர் மீது எமது கெரில்லா வீரர்கள் மேற்கொண்ட வெற்றிகரமான திடீர்த் தாக்குதலில் ஒரு சார்ஜண்டும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர். தேசியப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்று உயர்மட்டப் பந்தோபஸ்து மகாநாட்டிற்குத் தலைமை தாங்குவதற்கு லலித் அத்துலத்முதலி யாழ்ப்பாணத்திற்கு வந்திறங்கிய அரை மணி நேரத்திற்குள் இத்தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து வடக்கில் பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றிய சிங்களப் பொலிஸார் பாதுகாப்பு மிகுந்த யாழ்ப்பாணம், காங்கேசந்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டனர். •

## இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டது 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

**9.4.84**

ஸ்ரீலங்கா விமானப்படையினர் சுன்னாகத்திலும் தெல்லிப்பழையிலும் அப்பாவி மக்களைச் சுட்டுக்கொன்ற கொலைபாதக நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்குமுகமாக எமது கெரில்லா வீரர்கள் இராணுவ வாகனத்தின் மீது மேற்கொண்ட திடீர்த்தாக்குதல் எதிரிகளுக்குப் பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது.

ஸ்ரீலங்கா பாசிஸ அரசு புதிதாக அமைத்துள்ள கஜபாகு ரெஜிமண்ட் பிரிவைச் சேர்ந்த இராணுவக் கூலிப்படைகளை ஏற்றிக்கொண்டு ஆயுதப்பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்த இராணுவ ட்ரக்வண்டி மீது எமது கெரில்லாப் போர் வீரர்கள் நடத்திய அதிரடித்ததாக்குதலில் பதினைந்து அரசு படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருபது பேர் மோசமாகக் காயமுற்றனர்.

1984 ஏப்ரல் மாதம் 9-ம் திகதி பிற்பகல் 2 மணி அளவில் யாழ் புகையிரத நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் அரசபடைகளை நிலைகுலையச் செய்தது. பாதையோரத்தில் பாரிய வெடிகுண்டுகள் கொண்ட வான் ஒன்றினை நிறுத்திவைத்து இராணுவ ட்ரக் வண்டி அதனைக் கடக்கும் சமயத்தில் அவை வெடிக்க வைக்கப்பட்டன. இவ்வெடிகுண்டால் ஒரு இராணுவ ட்ரக் வண்டி பூரணமாகச் சிதைக்கப்





அழிக்கப்பட்ட இராணுவ வண்டி

Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive








யாழ் நகரில் அரச பயங்கரவாதிகளின் தாக்குதல்


EN8606





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொதுமக்களால் தாக்கப்பட்ட சிங்கள மகா வித்யாலயம்



## இராணுவத்துக்கு எதிராகக் கிளர்ந்த யாழ் பொதுமக்கள்

பட்டதுடன் மற்ற இராணுவ வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. இந்த வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட பீரங்கிக் குண்டுகள், கைக் குண்டுகளும் வெடித்தால் பலத்த சேதம் ஏற்பட்டது.

இராணுவ ட்ரக் வண்டிக்குப் பின்பக்கமாக வந்து கொண்டிருந்த வாகனங்களில் இருந்த கூலிப்படையினர் உயிருக்குப் பயந்து யாழ் புகையிரத நிலையம் வரை ஓடிச்சென்று ரயில் நிலையத்தில் உள்ள மலசல கூடங்களில் புகுந்து உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டுவிட்டனர்.

இத்தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்ததும் இராணுவத் துருப்புகள் இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்கள், கவச வண்டிகள் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்தார்கள். வீதியிலிருந்து இராணுவப் படையினரின் சடலங்களை அப்புறப்படுத்தியதும், வெறித்தனமாக வீதியில் சென்று கொண்டிருந்த அப்பாவித் தமிழ் மக்களைச் சுட்டு இராணுவ வெறியர்கள் தங்களது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

சிங்கள இராணுவத்தினரின் வெறித்தாக்குதலுக்கு முதலாவதாக இலக்காகியது சரித்திரப்புகழ் பெற்ற அடைக்கல மாதா கோயிலாகும். ''ரொக்கெட் லோஞ்சர்கள்'' மூலம் இக்கிறிஸ்தவ தேவாலயத்தினைத் தாக்கி யேசுநாதரின் சுருவத்தினை இந்த வெறியர்கள் உடைத்தனர். கண்ணில் தென்பட்ட கார்களையும் கடைகளையும் வீடுகளையும் தீக்கிரையாக்கினர். யாழ் கூட்டுறவு பண்டகசாலையும் தீயில் நாசமாகியது. •

யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தின் அட்டகாசத்தை முறியடிப்பதில் விடுதலைப்புலிகளுடன் யாழ் பொதுமக்களும் கலந்து கொண்டு போராடியமை குறிப்பிடத்தக்க ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

யாழ் நகரில் ஆங்காங்கு வீதிகளில் பொதுமக்களே தடைகளை ஏற்படுத்தினார்கள். இராணுவ வண்டிகளைக் கண்டதும் வெடிகுண்டுகளை வீசி இராணுவத்தினரைத் துரத்தி அடித்தனர். இந்தத் தாக்குதலை எதிர் கொள்ள முடியாமல் பல இடங்களில் சிங்கள இராணுவத்தினர் பின்வாங்கி ஓட்டம் பிடித்தார்கள். பொது மக்களுக்கு கைக்குண்டுகளை வழங்கி, அவர்களின் எதிர்த்தாக்குதலை எங்களின் இயக்கமே நெறிப்படுத்திக் கொண்டு மக்களுடன் களத்தில் நின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஏப்ரல் 10ம் திகதி காலை மாதாகோயில் தாக்கப்பட்டதைக் கேள்வியுற்று பொது மக்கள் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் இராணுவக் கூலிகளை எதிர்க்கத் திரண்டனர். ஸ்டான்லி வீதியிலிருந்த பௌத்த விகாரையும் ஆஸ்பத்திரி வீதியிலிருந்த சிங்கள மகாவித்தியாலயமும் தாக்கப்பட்டுத் தீயிடப்பட்டது. பல அரச கட்டிடங்களும் தாக்கப் பட்டன.

இந்த பௌத்த விகாரையும் சிங்கள மகாவித்தியாலயமும் சிங்கள இராணுவ வெறியர்களின் முகாமாகவே செயற்பட்டு வருகிறது. சிங்கள இராணுவ பிரிகேடியர்களைப் போல ஆயுதந்தாங்கிய விமானப் படையினரின் பாதுகாப்புடன்தான் ஹெலிகாப்டர்கள் மூலம் சிங்கள பௌத்த குருமார்கள் விகாரைகளுக்கு விஜயம் செய்கிறார்கள்.


யாழ் மக்களின் இந்தப் புரட்சிகரமான குமுறல் சிங்கள அடக்கு முறைக்கு எதிரான அவர்களது ஆத்திரத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. யாழ் மக்கள் தங்களது வெறுப்புணர்வை சிங்கள நிறுவனங்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடத் தொடங்கியதும் சிங்கள இராணுவம் நகருக்குள் புகுந்து பொது மக்கள் மீது கண்டபடி சுடத் தொடங்கியது. இதனால் பலர் இறந்தனர். பலர் காயமடைந்தனர்.

வீதிகளில் சுட்டுத்தள்ளிய தமிழர்களின் சடலங்களை நாக விகாரைக்கு அருகில் இராணுவப் படையினர் தீயிட்டு எரித்தனர். •

**10.4.84**

**1**984 ஏப்ரல் 10ம் திகதி மாலை. அன்றைய தினம் அரசு பிறப்பித்த ஊரடங்குச் சட்ட விதியையும் மீறிக்கொண்டு எமது கெரில்லா வீரர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் மீது திடீர்த்தாக் குதலை மேற்கொண்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்த தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை ஓடித்தப்பிவிடுமாறு கட்டளையிட்டுப்பின் பொலிஸ் நிலையத்தைத் தீயிட்டனர். பெருந்திரளாக மக்கள் திரண்டு இந்தப் பொலிஸ் நிலையத்தை எரித்து அழிப்பதற்கு எமது வீரர்களுக்கு உதவினர். இந்த பொலிஸ் நிலையத்தில் சிங்கள பொலிஸ் கமாண்டோக்கள் இருந்து கொண்டு இப்பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு பெருந்தொந்தரவுகளை ஏற்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. •

பொதுமக்களால் தாக்கப்பட்ட புத்த விகாரை



## பருத்தித்துறை பொலீஸ் நிலையம் தகர்க்கப்பட்டது



தமிழீழ ஆவணக்காப்பகம்

# பொலீஸ் உளவாளிகள் தண்டிக்கப்பட்டனர்

தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

துரோகிகளை அழிப்போம்!

பௌத்த சிங்கள இனவாத அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மக்கள் நாளாந்தம் இராணுவ வெறியாட்டத்திற்குப் பலியாகி வருகின்றனர். "தேடுதல் வேட்டை" எனும் பெயரில் கைது செய்யப்படும் இளைஞர்களது விபரங்கள் எதுவுமேயில்லை. தமிழீழம் எங்கும் துப்பாக்கி வேட்டுக்களும், தெருக்களெல்லாம் சுடுகாடுகளாகவும் மாற்றி வரும் அரசாங்கத்தின் அராஜகச் செயற்பாடுகள் நாளாந்தம் பெருகிவருகின்றன.

இவ்வாறு சிறிலங்கா அரசானது எமது மண்ணில் இராணுவ ஆட்சியை விஸ்தரித்து வரும் வேளையில் அதற்குத் துணைபோகும் இனத்துரோகிகள் எப்போதும் எம்மால் மன்னிக்கப்படமாட்டார்கள். இத்துரோகிகள் போராளிகளது விபரங்களையும், அவர்களது செயற்பாடுகள் பற்றிய தகவல்களையும் அரசிற்கு அறிவித்து அப் போராளிகளின் அழிவிற்குக் காரணமாகி வருகின்றனர். இவர்கள் தமது பதவி உயர்வு, சலுகை, சன்மானம் போன்றவற்றை அநுபவிப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையே அழித்துவிட முற்படுகின்றனர்.

இந்தவகையில் விஷேச பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் நவரத்தினம் (ந 7273) என்பவர் தான் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவானவன் என மக்களை ஏமாற்றி, சடுருவியவர்களிடமிருந்து விடுதலைப் போராளிகள் பற்றிய தகவல்களை அறிந்து அரசிற்கு அறிவித்து வந்தார். இவர் தனது பதவி உயர்விற்கான விண்ணப்பத்தில் உயிராபத்தைத் தான் எதிர்நோக்கினும் தனது சுய முயற்சியாலும், விருப்பத்தினாலும் இயக்கங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றதாகவும் இதன் காரணமாகத் தனக்கு உதவிப் பொலிஸ் அதிகாரிக்கான பதவி உயர்வினை வழங்கும்படி கேட்டுள்ளார். (இவரது பதவி உயர்வுக்கான விண்ணப்பம் மறுபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது) இவ்வாறு காட்டிக் கொடுத்து வந்த இவ் இனத்துரோகிக்கு 2-5-84 அன்று பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து எம்மால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

15-7-83 அன்று எமது இயக்க மறைவிடம் காட்டிக்கொடுக்கப்பட்டு எதிரி இராணுவத்தினர் முற்றுகையிட்ட நிலையில் எதிரியிடம் பிடிபடாது, தாக்குதற் பிரிவுத் தலைவர் சார்ள்ஸ் அன்ரனியும் (ஆசீர், சீலன்) இளம் வீரர் அருள்நாதனும் (ஆனந்) வீரமரணமடைந்தனர். எமது போராளிகளைக் காட்டிக் கொடுத்தது பற்றிய ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்றோம். இதனடிப்படையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் பொ. சுப்பிரமணியத்திற்கு (PC 71..) 4-5-84 அன்று மீசாலையில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இனத்துரோகியே! உன் காட்டிக்கொடுக்கும் கயமைத்தனத்தைச் செய்ய முன் ஒருகணம் சிந்தித்துப்பார். இதன் மூலம் யாரைக் காட்டிக் கொடுக்கப் போகின்றாய்? இச் சமூகத்தில் நீயும் ஒரு அங்கம் என்பதனை மறந்து உன்னையே நீ காட்டிக் கொடுக்கின்றாய். இதன் மூலம் உன் குழந்தைகளின் பிரகாசம் மிக்க எதிர்காலத்தைத் தான் அழித்துவிட முற்படுகின்றாய். உன் துரோகத்தனத்தால் உன்னை நாம் அழிக்கும் போது சகோதரி ஒருத்தி விதவையாகின்றாள். தமிழீழத்தின் மழலைகள் அநாதைகளாகின்றன. நீ ஒரு இனத் துரோகியாகி உன் குழந்தைகளுக்கும் உன் சமுதாயத்துக்கும் ஒரு அவமானச் சின்னமாக வாழ்ந்து வருகின்றாய். இத்தகைய அவமானகரமான காட்டிக் கொடுக்கும் செயலினை நிறுத்தி உன் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக உன் சமுதாயத்திற்காக வாழ்ந்து கொள்.

வெல்க தமிழீழம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!!

பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியற்குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு: பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்

# புலிகளின் துணிகரச் சிறையுடைப்பு

**2.5.84**

சிங்கள இனவாத அரசின் ஏஜண்டுகளாகச் செயற்பட்டு விடுதலை வீரர்களைக் காட்டிக் கொடுத்துவந்த தமிழ்த் துரோகிகளாக இரு பொலிஸ் அதிகாரிகள் விடுதலைப்புலிகளால் மரண தண்டனை பெற்றனர். இவர்களது நாசகார வேலை சம்பந்தமாக தகுந்த சான்றுகள் பெற்ற பின்னரே இக்கயவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

1984 மே 2ம் திகதி, யாழ் விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜண்ட் நவரெத்தினம், பருத்தித்துறை பஸ் நிலையத்தில்வைத்து எமது கெரில்லா வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் பதவி உயர்வுக்காக இவர் விடுதலை இயக்கங்கள்பற்றிய தகவல்களை அரசுக்கு கொடுத்துவந்தார். இவரது நாசகார வேலைகள் காரணமாக பல தீவிரவாத இளைஞர்கள் சிறைசெல்ல நேர்ந்தது. இவருக்கு மரண தண்டனை வழங்கி நாம் அதற்கு உரிமை கோரினோம். அந்த உரிமைகோரிய பிரசுரத்தில் இவரது துரோகச் செயல்களை சான்றுகளுடன் அம்பலப்படுத்தினோம். ●

**4.5.84**

1984 மே 4ந் திகதி, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் மீசாலையில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை பெற்றார். எமது தலைசிறந்த இராணுவத் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் சார்ல்ஸ் அன்ரனி (சீலன்) காட்டிக் கொடுக்கப்பட்டதற்கு இவரே பொறுப்பாளியாக இருந்தார் என்பதற்கு தகுந்த சான்றுகள் பெற்றதுமே இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இவரது துரோகத்தனத்தால் சீலனும், அருள்நாதன் என்ற ஒரு இளம் போராளியும் 1983 ஜுலை 15ந் திகதி மீசாலையில் இராணுவப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு, இறுதிவரை போராடி வீரமரணமடைந்தனர். ●

**10.6.84**

1984 ஜுன் 10ம் திகதி கடுமையான காவல் பந்தோபஸ்துகள் கொண்ட மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிர்மலா நித்தியானந்தனை தமிழீழ விடுதலைப்

I.G Police.

Through

D.I.G N.R/S.P Jaffna/A.S.P Crimes, Jaffna. (O.I.C Spl.Unit)

**Application for Special Promotion to the rank of Sub-Inspector.**

I, P.S 7273 Navaratnam of the Special Unit, Jaffna beg to bring the following facts for your kind consideration for Special Promotion to the rank of Sub Inspector.

(1) I was enlisted as P.C on 19.07.57 and was promoted to the rank of P.S w.e.f 01.06.1973. During the period, I was in charge of the Delft Police station for three years till it was closed and proved myself as fit to carry on as O.I.C.

(2) When I was attached to Kayts Police station in 1982, I arrested two Terrorist suspects who were responsible for recruiting youngsters in the area to the Terrorist Movement. This refers to M.C Kayts case No. B 53/82. The party was led by Mr. Richard Wijesekera, former S.P Jaffna.

(3) In the latter of 1982, the then D.I.G N.R Mr. W.B.Rajaguru specially selected my me to the Special Unit, Jaffna and I was sent to V.V.T Police for 02 months to bring information regarding a hard core terrorist by the name of 'Ravi'. Several attempts were made by me to apprehend this hard core terrorists with the assistance of the Army and hand picked Police officers, but failed.

(4) It was on my personal effort and enthusiasm at the risk of my life, I was able to get the hard core terrorists Ravi arrested. This suspect is a gazetted absconder who is wanted for the Double Murder of Police officers and Robbery at Neerveliy.

(5) On 28.05.83, I got another reliable information and followed another two terrorists at Vavuniya and identified one of them as Manna alias Amirthalingam of Deflt. At 23.00 hrs I proceeded to Vavuniya Police station and gave prompt information re. Terrorist Mannar alias Amirthalingam who was in the company of two others in Jaya Hotel at Vavuniya, and was in possession of a Machine gun. There was also in information that these suspects were planning to attack the Vavuniya Police. If not for my igformation and passing it to the Duty Officer at the Police, there would have been a Major disaster. I thus, averted a precarious sitution that would have arisen at Vavuniya. It was subsequently known that these suspects had been responsible for the murder of two Air Force personnel. This had happened after my passing of information about these suspects five days prior to the incident. A copy of the information passed on to I.G through D.I.G N.R is attached.

(6) While I was on 'Off duty' I got an information to say that Police personnel at Pt. Pedro were shot and the Jeep was removed. I immediately rushed to the scene alone in civils and took descriptions of the attackers preserved the empty ammunition at the scene, sent messages to the Police and preserved the dead bodies till the arrival of the Police. The descriptions of the suspects were promptly passed on to Mr. Jinadama. A.S.P C.I.D. On the following day your honour visited the scene and I made away of actually what happened at the time of the incident as I was the only Police officer to visit the scene immediately and get information

(7) It was I who gave the first information in regard to the set up of Eelam Broad casting corporation to the C.I.D through S.P Jaffna.

(8) It was I who gave the information of terrorist suspect S.Sathianathan who was shot at the Manipay Bank Robbery and was taken to India. After cremation of the body in India, ashes were handed over to parents at V.V.T.

I earnestly request that you be good enough to consider the facts mentioned above, where I had personally risked my life in getting information leading to involvements of Terrorist movements in the area and grant me redress by way of special promotion to the rank of S.I.

Your obedient Servant,

(signature)

( P.S 7273 Navaratnam )

Special Unit, Jaffna.


சார்ஜன்ட் நவரத்தினத்தின் பதவி உயர்வுக்கான விண்ணப்பம்.

தமிழ்ழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புலிகளின் அதிரடிப் படைப்பிரிவினர் மிகவும் நுட்பமான, சாதுர்யமான
இராணுவ நடவடிக்கை மூலம் சிறை மீட்டனர். தமிழீழப் போராளியான
நிர்மலா நித்தியானந்தன் சிறீலங்கா அரசின் பயங்கரவாதத் தடைச் சட்
டத்தின்கீழ் இருபது மாத காலம் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் காயமுற்ற தமிழீழ விடுதலைப்
புலிகளுக்கு புகலிடம் வழங்கினுர் என்றும் விடுதலைப் போராளிகளைப்
பற்றிய தகவல்களை அறிந்திருந்தும் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை என்றும்
நிர்மலா நித்தியானந்தன் அவரது கணவருடன் 1982ம் ஆண்டு நவம்பர்
20ம் திகதி கைது செய்யப் பட்டார். குருநகரின் இராணுவ முகாமில் சில
காலம் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு
மாற்றப் பட்டா. ..வலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்ற படுகொலை
களிலிருந்து உயி॥ தப்பிய இவர் பின்பு மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு
மாற்றப்பட்டார்.

1983 செப்டம்பர் 23ம் திகதி மட்டக்களப்புச் சிறைச் சாலையி
லிருந்து தமிழ்ப் போராளிகள் தப்பி வெளியேறியபோது நிர்மலா மட்டும்
தப்பி வெளியேற முடியாத துரதிர்ஷ்டம் சம்பவித்தது. இந்நிகழ்ச்சிக்குப்
பின் சிங்கள இராணுவ அதிரடிப் படைப்பிரிவு நிரந்தரமாகவே நிறுவப்
பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலை கடுமையாக கண்காணிப்புக்கு உட்
படுத்தப்பட்டது. நிர்மலாவை மீண்டும் சிறைச் சாலையிலிருந்து மீட்டெ
டுப்பது சாத்தியமில்லை என்ற நிலைமையே பொதுவாக நிலவியது.
ஆயினும் மட்டக்களப்புச் சிறைச்சாலை மீது தமிழீழ விடுதலைப்புலிகள்
சடுதியான, துணிகரமான தாக்குதலை மேற்கொண்டு நிர்மலாவை சிறைச்
சாலையிலிருந்து மீட்டெடுத்தனர்.

1984 ஜுன் மாதம் 15ம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தில்
வழக்கு விசாரணை மேற்கொள்வதற்காக நிர்மலா நித்தியானந்தனைக்
கொழும்பிற்கு கொண்டு செல்ல ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்தது. அதற்கு
முன்னதாக நிர்மலாவை மீட்கும் திட்டத்தை விடுதலைப்புலிகள் துரிதப்
படுத்தினர். ஜுன் மாதம் 10ம் திகதி இரவு 7-15 மணி அளவில் நவீனரக
ஆயுதந்தாங்கிய விடுதலைப்புலிகளின் கெரில்லா வீரர்கள் 15 பேர் இந்த
துணிச்சல் வாய்ந்த நடவடிக்கைக்காகக் களத்தில் இறங்கினர். சிறைச்
சாலையைச் சுற்றிலும் முக்கிய நிலையங்களில் கெரில்லா வீரர்கள் நிறுத்தப்
பட்டனர். சிறைக் காவலர்களின் சீருடையில் சென்ற கெரில்லா வீரர்கள்
கொழும்பிலிருந்து சில கைதிகளை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தாம்




மட்டக்களப்பு சிறையுடைப்பை குறிக்கும் வரைபடம்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamil Archive

அனுமதிக்கக் கொண்டு வந்திருப்பதாகக் கூறி உள்ளே காவல் நின்ற சிறையதிகாரிகளை நம்பச் செய்து கதவைத் திறக்க செய்தனர். முதலாவது பிரதான கதவு சாடைமாடையாகத் திறக்கப்பட்டு கெரில்லா வீரர்கள் சிறைக்குள் நுழைவதற்கிடையில் சிறை உடைப்பு நிகழ்கிறது என்பதை ஊகித்துக் கொண்டுவிட்ட சிங்களச் சிறை அதிகாரிகள் மூவரும் சடுதியாகக் கதவை மூட முயன்றதுடன் எமது கெரில்லா வீரர்களுடன் மோதவும் முயன்றனர். சிறைக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைத் தவிர்த்துக் கொண்ட எமது கெரில்லா வீரர்கள் உக்கிரமான கைகலப்பினை அடுத்து சிறை அதிகாரிகளை மடக்கினர். இந்த மோதலில் இரண்டு சிறைக்காவல் அதிகாரிகள் கடுமையாக காயமுற நேர்ந்தது.

சிறைச்சாலைக்குள்ளேயும் காவல் பந்தோபஸ்து தீவிரமாக இருந்ததால் இரண்டாவது இரும்புக் கதவுக்குரிய திறப்பை சிறை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது போயிற்று. இந்நிலையில் எமது கெரில்லா வீரர்கள் இரும்புக் கதவை உடைத்தே திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைக் கண்டறிந்த பிறகாவல் அதிகாரிகள் பீதியில் பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர்.

இரும்புக் கதவை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த எமது கெரில்லா வீரர்கள் பெண் கைதிகள் பகுதிகளுக்கான கதவையும் உடைத்தே உள் நுழைந்தனர். ஆனால் நிர்மலாவின் அறைக் கதவுக்கான திறப்பைக் கொண்டிருந்த அதிகாரி ஓடி ஒளிந்து கொண்டதால், நிர்மலாவின் அறைக் கதவையும் எமது கெரில்லா வீரர்கள் உடைத்தே நிர்மலாவை மீட்டெடுத்தனர். நிர்மலாவின் இந்தச் சிறை மீட்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் புரட்சிகர ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்க்கிறது. ●

தகர்க்கப்பட்ட கடல் விமானம்.



## கடல் விமானம் தகர்க்கப்பட்டது

**15.6.84**

1984 ஜூன் 15ம் திகதி காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள பருத்தியடைப்பு என்ற கிராமத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடல் விமானத்தை விடுதலைப்புலிகள் தீயிட்டு நாசமாக்கினர். ஸ்ரீலங்காவின் கடற்படை கமாண்டர் அசோகா டி சில்வா இந்த விமானத்திலேயே நான்கு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விமானம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் சடுதியாக நுழைந்த விடுதலைப்புலிகள் விமானத்திற்குக் காவல் நின்றவர்களை அச்சுறுத்தி விமானத்திற்குத் தீவைத்தனர். விமானத்தின் பெற்றோல் டாங்கியில் தீப் பற்றியபோது ஏற்பட்ட பெரும் வெடிச்சத்தம் காரைநகர் கடற்படை முகாமிற்குக்கூடக் கேட்டது. •

## ஆயுதப் போராட்டம் தீவிரமடைகிறது பல முனைகளில் புலிகள் தாக்குதல் இராணுவத்துக்குப் பலத்த உயிர்ச்சேதம்

1984 ஆகஸ்ட் மாதத்தில் தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் விஸ்தரிப்படைந்தது. சிங்கள இனவாத இராணுவம் வடக்கில் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாத வெறியாட்டத்தை எதிர்த்து எமது விடுதலை இயக்கத்தின் கெரில்லா அணிகள் பல முனைகளில் ஆயுதப் படைகளுடன் மோதி எதிரிக்கு பலத்த உயிர்ச் சேதத்தை விளைவித்தனர். வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய முனைகளில் விடுதலைப்புலி வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள அரச படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். பலமுனைகளில் பலத்த பதிலடிகள் வாங்கி பதட்டமடைந்த சிங்கள இராணுவத்தினர், வழமைபோல கோழைத்தனமாக தமது ஆவேசத்தை அப்பாவி வெகுசனம்மீது கட்டவிழ்த்துவிட்டு தாம் ஒரு கட்டுப்பாடற்ற காடையர் கூட்டம் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனம் புரிந்துவிட்டு தண்டனை பெறுமல் தப்பிவிட முடியாது என்பதனை சிங்கள ஆயுதப் படைகளுக்கு எமது விடுதலை வீரர்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். நாம் ஓரிடத்தில் மட்டும் எதிரியைத் தாக்கிவிட்டு ஒளிந்துகொள்ளவில்லை. பலமுனைகளில் எதிரியை எதிர்கொண்டு சமரிட்டிருக்கிறோம். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எதிரியைத் தாக்கிக் கதிகலங்கச் செய்யும் இராணுவ பலம் எமக்குப் பெருகி வருகிறது என்பதைச் சிங்கள அரசு இப்போது உணர்ந்து வருகிறது. அநியாயமாக எமது மக்களைக் கொன்று குவிக்கும் இந்த இனவெறி கொண்ட இராணுவத்தை பூண்டோடு அழிக்கும்வரை எமது ஆயுதப் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை.

ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போரை பயங்கரவாதம் எனப் பறைசாற்றிக் கொண்டு, கெரில்லாப் போர் முறைக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈடுகொடுக்க முடியாது, வெகுசனம் மீது பழி தீர்த்துக்கொள்ளும் சிங்கள அரசின் போர்முறைத் திட்டமானது அப்பட்டமான இனக் கொலையை இலக்காகக் கொண்டது என்பதனை இன்றைய நாகரிக உலகம் நன்கு உணர்ந்துவிட்டது. அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துவிட்டு, 'பயங்கரவாதிகளை' அழித்துவிட்டோம் என அத்துலத்முதலி அவிழ்த்து விடும் அபாண்டமான பொய்களை உலக சமுதாயம் இன்று நம்பப் போவதில்லை. மனித குலத்தால் ஒதுக்கப்பட்ட சர்வதேச நாசகாரச் சக்திகளின் உதவியுடன் ஈழத் தமிழினத்தை படிப்படியாக ஒழித்துக்கட்டும் சிங்கள அரசின் இனப் படுகொலைகளை இனிப் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என பாரத நாடும் எச்சரித்திருக்கிறது. உலக சமூகத்தால் அந்நியமாக்கப்பட்டு ஆட்டம்காணும் சிங்கள இனவாத அரசு நீண்டகாலம் நிலைத்து நிற்கப் போவதில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்கி, ஜெயவர்த்தன அரசுக்கு குழிபறிப்பது எமது விடுதலை இயக்கமாக இருக்குமென்பதை நாம் உறுதியாக உலகிற்கு எடுத்துக் கூற விரும்புகிறோம்.


விடுதலைப்புலி இயக்கத்தின் சமீபத்திய இராணுவ வெற்றிகளை மூடி மறைத்து, எமது போராளிகள் பலர் கொல்லப்பட்டதாக சிங்கள அரசு விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து வருகிறது. ஆனால் உண்மையில் நடந்ததென்ன? சிங்கள ஆயுதப் படைகள் பல இடங்களில், பலத்த பதிலடிகள் வாங்கி, என்றுமில்லாதபடி பெரிய உயிர்ச் சேதத்தை அடைய நேரிட்டது. எமது இராணுவ நடவடிக்கைகளின் விவரத்தைக் கீழே தருகிறோம். •

**4.8.84**

**1**984 ஆகஸ்டு 4ம் திகதி சனிக்கிழமை விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா கடற்படையினருடன் நேரடியாகப் போரிடும் நிலைமை உருவாகியது.

வல்வெட்டித்துறைக்கண்மையில் உள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் விடுதலைப்புலிகளின் மோட்டார் படகு கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்காவின் வடகரையோரத்தில் கண்காணிப்பு வலயத்தில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த சிங்களக் கடற்படையினர் இந்த மோட்டார்ப் படகினைத் திடீரெனச் சுற்றி வளைத்தனர். பதினெட்டுப் பேரைக் கொண்ட ஸ்ரீலங்கா கடல் ரோந்துப் படையினரால் எதிர்பாராத நிலையில் எமது கெரில்லா வீரர்கள் நான்கு பேர் சுற்றி

**வடகடலில் கண்காணிப்பு வலயம்; மீறினுல் சூடு**




## கடற்படையினர் மீது புலிகள் தாக்குதல் 6 பேர் கொல்லப்பட்டனர்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வளைக்கப்பட்டனர். இந்நிலையில் தற்பாதுகாப்புக் கருதி எமது வீரர்கள், பதினெட்டு பேர் கொண்ட அந்தக் கடற்படைக் கோஷ்டியினர் மீது தாக்குதல் மேற்கொள்ள வேண்டியிருந்தது. கடற்படையினர் எமது கெரில்லா வீரர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் எமது வீரர்கள் நான்கு பேரே நின்றனராயினும் நீண்ட பயிற்சியும், சாகும்வரை போராடும் துணிவும் கொண்டவர்களாக அவர்கள் இருந்தமையால் இத்துணிகரத் தாக்குதலில் கடற்படைக் கூலிகளை அவர்கள் வெற்றிகரமாகத் தோற்கடிக்க முடிந்தது. இத்தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீலங்காக் கடற்படையினர், ஆறு பேர் அந்த இடத்திலேயே சுடப்பட்டு மரணமானார்கள். மூன்று பேர் படுகாயமடைந்தனர். மிகுதிக் கடற்படையினர் பீதியில் தமது நவீன ரோந்துப் படகினையும் விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

சில மாதங்களுக்கு முன் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த படகினைச் சுற்றி வளைத்து படகிலிருந்த பதினாறு தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்று இந்தக் கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தை நாம் என்றும் நினைவில் வைத்திருக்கிறோம். ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது நீடித்த கெரில்லா யுத்த நடவடிக்கைகளில் கடற்படையினருக்கு எதிரான வெற்றிகரமாகத் தொடுக்கப்பட்ட முதல் பெரிய கெரில்லாத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. ●

## இராணுவ வாகனம் தகர்க்கப்பட்டது
## 9 கமாண்டோப் பொலீசார் உயிரிழந்தனர்

**5.8.84**



நெடியகாடு
தாக்குதல் நடந்த இடம்.

ஸ்ரீலங்கா சிங்களக் கடற்படையினருக்கு எதிரான எமது தாக்குதலையடுத்து சிங்கள இராணுவப் படைகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது தமது இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் வீதிகளிலே சுடப்பட்டனர். வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது. அப்பாவி மக்கள் மீது சிங்கள இராணுவப் படையினர் நடத்திய இந்த நாசகாரச் செயலுக்கு நாமும் பதிலடி கொடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

*1984* ஆகஸ்டு 5ம் திகதியன்று வல்வெட்டித்துறைக்கு அருகில் நெடியகாடு என்ற இடத்தில் மூன்று கவசவண்டிகள், ஒரு ட்ரக், ஒரு ஜீப் சகிதம் வெறியாட்டம் நடத்திவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிங்களப் படையினர் மீது எமது வீரர்கள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். பிரதான வீதியில் எமது வீரர்கள் புதைத்து வைத்திருந்த நிலக்கண்ணி வெடித்ததில் ஒரு ஜீப் வண்டி தூள் தூளாகச் சிதறியதுடன் அந்த ஜீப்பில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சென்று கொண்டிருந்த ஒன்பது கமாண்டோக்களும் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். இந்தத் திடீர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட உதவி பொலிஸ் அதிபரான ஜயரட்ன என்பவன் மோசமான இன வெறியனும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீவைப்பு போன்ற நாசகாரச் செயல்களுக்குப் பொறுப்பாக இருந்தவனுமாவான். ●

## ஒட்டிசுட்டான் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் 8 பொலீசார் கொல்லப்பட்டனர்

**5.8.84**

1984 ஆகஸ்ட் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ்குடா நாட்டிற்கு வெளியே முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் என்ற பொலிஸ் நிலையத்தின் மீது எமது வீரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். பயிற்றப்பட்ட எமது வீரர்களுக்குப் போதுமான ஆயுதங்கள் இல்லாத நிலையில் எதிரிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டிய நிலையில் நாம் திட்டமிட்டு மேற்கொண்ட கெரில்லா நடவடிக்கை இதுவாகும்.

50 பேரைக் கொண்ட இந்த பொலிஸ் நிலையத்தில் 30 பேர் கெரில்லாத் தாக்குதலுக்கு எதிரான நவீன உத்தி முறைகளில் பயிற்றப்பட்ட பொலிஸ் கமாண்டோக்கள் ஆவர். மாடிக்கட்டடத்துடன் அமைந்திருந்த இந்த பொலிஸ் நிலையத்தை எமது கெரில்லா வீரர்கள் மின்னலெனச் சுற்றி வளைத்துத் தாக்கினர். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பொலிஸ் நிலையத்தின் முன்புறமாயும் பின்புறமாயும் பாய்ந்து சென்று தங்களை நிலைப்படுத்திக் கொண்டு விட்ட எமது வீரர்களின் அதிரடித் தாக்குதலில் சிங்கள வெறியனான கனேமுல்ல என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட எட்டு பொலிஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். எந்திரத் துப்பாக்கிகள் சகிதம் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலுக்கு முன்நிற்கமாட்டாமல் மற்ற சிங்களக் கூலிகள் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடிவிட்டனர். ஐம்பது நிமிடங்கள் அந்த பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் விழுந்தது. பொலிஸ் நிலையத்திலிருந்து நான்கு இயந்திரத் துப்பாக்கிகள், மூன்று .303 ரக ரைபிள்கள், நான்கு ரிப்பீட்டர் துப்பாக்கிகள், இரண்டு .38 ரக சுழல் துப்பாக்கிகள் ஆகிய ஆயுதங்களையும் ரவைகளையும் எமது வீரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் விடுதலைப்புலிகள் அந்த பொலிஸ் நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். ●

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


## இராணுவ கவசவண்டி சிதைக்கப்பட்டது

**6.8.84**

1984 ஆகஸ்ட் 6ந் திகதியன்று யாழ்ப்பாண பிரதான ஆஸ்பத்திரிக்கு அண்மையில் கவசவண்டியை வைத்து கட்டிடங்களைச் சுட்டு சேதப்படுத்திக் கொண்டிருந்த சிங்கள படை வீரர்களுக்கு எதிராக எமது கெரில்லா வீரர்கள் செயற்பட்டனர். யாழ் நகரின் முக்கிய சந்தியில் கைக்குண்டுகளை வீசி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவக் கவசவண்டி ஒன்று சிதைக்கப்பட்டதுடன் ஓர் இராணுவ அதிகாரி அந்த இடத்திலேயே மரணமானுர். மற்றும் இரண்டு இராணுவக் கூலிப் படையினர் படுகாயமுற்றனர்.

அதே தினத்தன்று வல்வெட்டித்துறையில் கெருடாவில் என்ற கிராமத்தில் எமது கெரில்லா வீரர் ஒருவர் இராணுவப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டார். தனி ஒருவராக நின்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஓர் இராணுவக் கூலி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் மற்ற இரண்டு இராணுவக் கூலிகளும் காயத்துடன் தப்பி ஓடிவிட்டனர்.

## மன்னாரில் இராணுவம் மீது தாக்குதல் 13 இராணுவத்தினர் பலி



**11.8.84**

மன்னாரில் அமைந்துள்ள தள்ளாடி இராணுவ முகாம் தமிழ் இளைஞர்களைச் சித்திரவதை செய்வதில் பேர் பெற்ற முகாமாகும். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்க் கிராமங்களிலிருந்து தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்படுகிற தமிழ் இளைஞர்களைப் பற்றிய தகவல்கள் வெளித்தெரிய வருவதேயில்லை. மிகவும் பின் தங்கிய இந்தத் தமிழ்க்கிராமங்களிலிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சட்டத்தரணிகளை அணுகவோ, பெற்றோரைச் சந்திக்கவோ அனுமதிக்கப்படாத நிலையில் உள்ளே அனுபவிக்கும் சித்திரவதைகள் சொல்லில் அடங்காதவை.

இந்த இனவெறி பிடித்த இராணுவமுகாமை சேர்ந்த படையினர் மீது எமது கெரில்லா வீரர்கள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் எமது ஆயுதப் போராட்டத்தின் புதியபரிமாணத்தைக் காட்டுகிறது.

மன்னார்—பூநகரி பிரதான பாதையில் நிலக்கண்ணி சகிதம் எமது அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில், நிலக்கண்ணி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வெடித்து அதில் சென்று கொண்டிருந்த 13 வீரர்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். அவர்கள் பயணம் செய்த இராணுவஜீப் ஆகாயத்தில் 30 அடி உயரம் வரை சிதறுண்ட நிலையில் தூக்கி எறியப்பட்டது. •

**14.8.84**

## வல்வைப் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் கட்டிடம் சேதம், பலருக்கு காயம்

பொலிஸ் கமாண்டோக்கள், இராணுவப் படையினர் ஆகியோரை உள்ளடக்கிய வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் மீது அதிகாலை 4—30 மணியளவில் எமது கெரில்லா வீரர்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டிருந்த செக்யூரிட்டி லைட் சுட்டு நொறுக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்தின் மூன்று புறங்களிலிருந்தும் கைக்குண்டுகள் சகிதம் தாக்குதல் நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் பொலிஸ் நிலையத்தின் அரச கூலிப் படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் போரில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் பல அரச படைக் கூலிகள் படுகாயமுற்றனர். எமது வீரர்கள் ஒரு மணி நேரத்திற்குப்பின் தமது தரப்பில் எந்த விதச் சேதமும் இல்லாத நிலையில் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர். •

**24.8.84**

## கோபுரக் கவசவண்டி நாசம் 8 இராணுவத்தினர் பலி

குரவெட்டி மேற்கில் கல்லுவம் மண்டான் பாதையில் இராணுவ வாகனங்களை நாசம் செய்வதற்காக விடுதலைப்புலிகள் நிலக்கண்ணிகளைப் புதைத்து வைத்துள்ளனர் என்று துரோகிகள் அரச படைகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 24ம் திகதி பகல் 12—30 மணியளவில் கோபுரக்கவச வண்டி சகிதம் ஸ்ரீலங்கா இராணுவப்படையினர் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கே வந்து பாதையைத் துருவி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஆயினும் நிதானமாகக் காத்திருந்த விடுதலைப்புலிகள் துல்லியமாகக் கணக்கிட்டு கோபுரக்கவச வண்டி குறிக்கப்பட்ட இடத்தை வந்தடையும் தறுவாயில் குண்டுகளை வெடிக்கச்செய்து கோபுரக் கவச வண்டியைப் பூரணமாக நாசம் செய்தனர். கோபுரக்கவச வண்டி குப்புறக் கவிழ்ந்து பூரணமாகப் பற்றி எரிந்தது. இத்தாக்குதலில் 8 இராணுவப்படையினர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அச்சுவேலியில் தாக்குதல் இராணுவ நிலக்கண்ணி நிபுணர்கள் கொல்லப்பட்டனர்

**24.8.84**

ஆகஸ்ட் 24ம் திகதி நீர்வேலியில் பிரதான பாதையில் நிலக்கண்ணிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தகவல் கிடைத்ததையடுத்து இராணுவப்படை தேடுதல் நடத்தியது. தங்கள் வாகனத்தைப் பின்னால் மெதுவாக நகர்த்திக் கொண்டு முன்னால் இராணுவப்படையினர் நிலக்கண்ணிகளைத் துருவித் தேடிக்கொண்டிருந்தனர். சரியான தருணத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கப் பண்ணி 3 இராணுவப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். •

## திக்கத்தில் இராணுவ டிரக் நொறுக்கப் பட்டது 20 கமாண்டோ பொலீசார் உயிரிழந்தனர்

**1.9.84**

அரசபடைகள் அப்பாவித் தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்திவரும் அட்டூழியங்களுக்கு மீண்டும் பதிலடி கொடுக்கு முகமாக பருத்தித்துறையிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள திக்கம் என்ற இடத்தில் அரசபடைகளின் மீது எமது வீரர்கள் வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலை மேற்கொண்டனர். 1984 செப்டம்பர் முதலாம் திகதி திக்கத்தில் பொலிஸ் கமாண்டோக்களை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த ட்ரக் வண்டியை எமது கெரில்லா வீரர்கள் நிலக்கண்ணி வைத்துச் சிதறடித்தனர். நிலக்கண்ணி வெடித்ததால் சிதறுண்டு போன ட்ரக்வண்டியில் இருபது கமாண்டோக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறந்த கெரில்லா கமாண்டர்களில் ஒருவரான கெப்டன் ரஞ்சனின் மரணத்திற்கு இந்தக் குறிப்பிட்ட கமாண்டோ பிரிவுதான் காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. •



கப்டன் ஞானேந்திர மோகன் (ரஞ்சன்லாலா)

## முல்லைத்தீவில் இராணுவம் மீது திடீர் தாக்குதல் 15 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

**10.9.84**

முல்லைத்தீவு முகாமைச் சேர்ந்த இராணுவப் படையினர் சிங்கள இனவாதத்தில் ஊறிப்போனவர்கள். முல்லைத்தீவில் வாழ்கின்ற தமிழர்களை இவர்கள் நிரந்தரமாக அச்சுறுத்திக்கொண்டும், அதே சமயத்தில் இப்பகுதியில் சிங்கள குடியேற்றத்தை வெகுவாக ஊக்குவித்துக் கொண்டும் வருகிறார்கள். இராணுவ அனுசரணையுடன் முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்களில் பலோத்காரமாகக் குடியேறியிருக்கும் ஆயிரக்

jpg234744421-[54]51.jpg

Tamileelam Archive

கணக்கான சிங்கள மீனவர்கள் இப்பகுதிவாழும் தமிழர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறார்கள். தமிழ் மீனவர்களின் மீன்பிடி வள்ளங்களையும் வலைகளையும் அழித்து அவர்களைத் தமது பாரம்பரியக் கிராமங்களிலிருந்தே அப்புறப்படுத்திய பல சந்தர்ப்பங்கள் உண்டு. முல்லைத்தீவு முகாமைச் சேர்ந்த இந்த இனவெறி இராணுவப்படையினரே எமது கெரில்லா வீரர்களின் தாக்குதலுக்குப் பலியானார்கள்.

*1984 செப்டம்பர் 10ம் திகதி.*

முல்லைத்தீவிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள செம்மலை என்ற கிராமத்தில் பதினாறு வீரர்களைக் கொண்ட விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல் பிரிவு இராணுவத்தின் மீதான தாக்குதலுக்குத் தயாராயிருந்தது. செம்மலைக் கூடாகச் செல்லும் முல்லைத்தீவு—கொக்குளாய் பிரதான பாதையில் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. காலை 10—15 மணியளவில் ஒரு ட்ரக் வண்டி, இரண்டு ஜீப் வண்டிகள் சகிதம் இராணுவப் படையினர் குறிக்கப்பட்ட இந்த இடத்தை வந்து சேர்ந்ததும் நிலக்கண்ணிகள் வெடிக்க வைக்கப்பட்டன. ஒரு இராணுவ ஜீப் தூளாகச் சிதறியது. ஆக முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப்பில் இருந்த இராணுவப் படையினர் அச்சத்திலும் திகிலிலும் ஜீப்புடன் பறந்தோடித் தப்பிவிட்டனர். இராணுவ ட்ரக் வண்டி சடுதியாக நின்றுவிட்டது. இராணுவ ட்ரக்கிலிருந்து இராணுவப்படையினர் குதித்து இறங்க ஆரம்பித்ததும் எமது கெரில்லா வீரர்கள் சரமாரியாகச் சுட ஆரம்பித்தார்கள். நான்கு இராணுவப் படையினர் அந்த இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த கெரில்லாத் தாக்குதலில் எல்லாமாக பதினைந்து இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவுக் கரையோர மீன்பிடி கிராமங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் மத்தியில் இந்த வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. புலிகள் இங்கும் வந்துவிட்டன என்று கதை பரவியது. சிங்கள இராணுவம் கொடுத்த பாதுகாப்பு வாக்குறுதிகளையும் கணக்கில் எடுக்காமல், பலோத்காரமாக இங்கு குடியேறியிருந்த சிங்கள மீனவர்களில் பலர் தமது சொந்த ஊருக்கே திரும்பவும் ஓடிவிட்டனர்.●



துககததில் நாசமாக்கபபடட இராணுவ வாகனம்.

**22.9.84**

## களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையம் மீது தாக்குதல், தாக்குதல் பிரிவுத் தலைவன் பரமதேவா வீரமரணம்

செப்டம்பர் 22—ம் திகதி மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். விசேஷப் பயிற்சி பெற்ற ஐம்பதுக்கும் அதிகமான

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொலிஸ் கமாண்டோக்களால் எப்போதும் இந்த பொலிஸ் நிலையம் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த பொலிஸ் நிலையத்தின் மீது திடீர்த் தாக்குதல் மேற்கொள்ள எமது கெரில்லா வீரர்கள் திட்டம் தீட்டிச் செயற்படுத்தினர்.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்புப் பிரதேசத் தாக்குதற் பிரிவுத் தலைவன் லெப்டினன்ட் இரா. பரமதேவா தலைமையில் எமது கெரில்லா வீரர்கள் அதிரடித் தாக்குதலில் இறங்கினர். கடத்தப்பட்ட வாகனங்களில் எமது வீரர்கள் பொலிஸ் நிலையத்தின் முன்னால் இறங்கினர். தங்களது பொலிஸ் நிலையம் தாக்கப்படக்கூடும் என்பதை எப்படியோ முன்கூட்டியே ஊகித்துக்கொண்டுவிட்ட பொலிஸ் நிலையம் தயார் நிலையில் நின்று கொண்டிருந்திருக்கிறது. எமது கெரில்லா வீரர்கள் வாகனத்திலிருந்து இறங்க ஆரம்பித்ததுமே பொலிஸ் கமாண்டோக்கள் எமது வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். பொலிஸ் கமாண்டோக் களுக்கும் எமது கெரில்லா வீரர்களுக்குமிடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. பாதுகாப்பான இடங்களில் தங்களை முன்னதாகவே நிலைப்படுத்திக் கொண்டு விட்டதால் பொலிஸ் கமாண்டோக்களுக்குச் சாதகமாகவே சூழ்நிலை அமைந்து விட்டது. எனினும் எமது வீரர்கள் உறுதியோடு போராடினுர்கள். விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணியில் முன் நின்று அச்சமின்றிப் போராடிய லெப்டினன்ட் இரா. பரமதேவா களத்திலேயே வீரமரணம் அடைந்தார். பரமதேவாவுடன் ரவி எனப்படும் தம்பிப்பிள்ளை வாமதேவன் என்ற இளம் கெரில்லாப் போராளியும் இத் தாக்குதலின்போது வீரமரணம் அடைந்தார். நிலைமை தங்களுக்குப் பாதக மாக இருப்பதை உணர்ந்துகொண்ட எமது போராளிகள் தந்திரோபாய ரீதியில் தாக்குதலை நிறுத்திக் கொண்டு விட்டனர். பிற போராளிகள் ஆபத்து எதுவுமின்றித் தமது தளங்களுக்கு மீண்டனர். ●

லெப்டினன்ட் ஆர். பரமதேவா (ராஜா)



## இராணுவ கவசவண்டி நாசம் 9 இராணுவத்தினர் பலி

**1.11.84**

நவம்பர் முதலாம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தொலைவில் அச்சுவேலி—வசாவிளான் வீதியில் நிலக்கண்ணி வெடிகள் சகிதம் எமது கெரில்லா வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவக் கவசவண்டி பூரணமாக நாசமாக்கப்பட்டதுடன் ஒன்பது இராணுவ வீரர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் மூன்று சிங்கள இராணுவ வீரர்கள் இத்தாக்குதலில் படுகாயத்திற் குள்ளாகினர். ●

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## நிலக் கண்ணி வெடித்தது 6 இராணுவத்தினர் பலி

**2.11.84**

நவம்பர் இரண்டாம் திகதியன்று தொண்டமனாறு—பலாலி வீதியில் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா இராணுவக் கவச வண்டியை நாசஞ் செய்தனர். இத்தாக்குதல் நிகழ்ச்சியில் ஆறு சிங்கள இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர்.

## வடபிராந்திய சிங்கள இராணுவத் தளபதி பிரிகேடியர் ஆரியப்பெருமா கொல்லப்பட்டார் தெல்லிப்பளையில் புலிகளின் சாதனை

**19.11.84**


யாழ்ப்பாணத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள தெல்லிப்பழையில் விடுதலைப்புலிகள் நடத்திய கெரில்லாத் தாக்குதலில் சிங்கள ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடபிராந்திய பிரிகேடியர் ஏ. ஆரியப்பெருமவும் மற்றும் எட்டு ஸ்ரீலங்கா இராணுவப் படையினரும் கொல்லப்பட்டனர்.

நவம்பர் 19—ம் திகதி வறுத்தலைவிளானில் கட்டுவன் — தெல்லிப் பழை வீதியில் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துக் கொண்டு எமது கெரில்லா வீரர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கெதிரான திடீர்த்தாக்குதலுக்குத் தயாராய் நின்று கொண்டிருந்தனர். இரண்டு கவசவண்டிகள் சகிதம் பிரிகேடியர் ஆரியப்பெரும ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது நிலக்கண்ணிகளை வெடிக்கச் செய்து விடுதலைப்புலிகள் கெரில்லாத் தாக்குதலை மேற்கொண்டனர். நிலக்கண்ணி வெடித்ததில் பிரிகேடியர் ஆரியப் பெரும சென்று கொண்டிருந்த ஜீப் வாகனம் தூளாகச் சிதறியது. இந்தத் தாக்குதலில் ஆரியப்பெருமவும் மற்றும் எட்டு இராணுவக் கமாண்டோக்களும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

வடக்கில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் இனவெறியன் ஆரியப்பெரும எமது கெரில்லாத் தாக்குதலில் கொல்லப்பட்டமை சிங்கள இனவாத அரசுக்கு அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழீழத்தில் நர வேட்டையாடித் திரியும் சிங்கள ஆயுதப் படைகளின் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கேர்னல் பதவி வகித்து வந்த ஆரியப்பெரும வடக்கில் இராணுவ அடக்கு முறையைத் தீவிரப்படுத்தி சிங்கள இனவாத அரசுக்குச் செய்த விசுவாசமான சேவையைப் பாராட்டி அவனது மரணத்திற்குப் பிறகு பிரிகேடியர் பதவி வழங்கி ஜே.ஆர். ஜயவர்த்தன இவருக்கு கௌரவம் வழங்கியிருக்கிறார்.

பிரிகேடியர் ஆரியப் பெரும
(இடமிருந்து மூன்றாவது)



தாய்நாட்டின் விடுதலைக்காக போராட்டக் களத்தில் உயிர்துறந்த தியாகிகளே! உங்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




ஆனந்த்
15-7-83



தாமு கந்தையா
25-7-83



அமலதாஸ்
13-5-84



சத்தீஸ்வரன்
25-7-83




ராஜ்மோகன்
20-1-84

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




பகீன்
18-5-84




ரகுபதி
28-5-84



ஸ்ரீபன்
16-6-84



ரெஜினல்ட்
18-7-84




மணிவாசகன்
18-7-84

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



சஞ்சீவி
11-8-84




குமரிநாடன்
23-8-84



ரோம்
29-10-84



எட்வின்
10-9-84



வாமதேவன்
22-9-84

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



அன்சார்
29-10-84



சீலன்
2-11-84



நிஜாம்
3-12-84

S. சிவானந்தராஜா
25-7-1983

நிக்கிதரன் (நிக்கி)
11-8-1984



திக்கத்தில் தாக்கப்பட்ட
இராணுவ டிரக்



சிதைக்கப்பட்ட கடல் விமானம்

இந்த வரலாற்றுக் குறிப்பானது எமது புரட்சிகர விடுதலை இயக்கத்தால் தலைமை தாங்கி முன்னெடுக்கப்படும் சுதந்திரப் போராட்டத்தின் உண்மைக் கதை. ஒரு பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள ஒடுக்கப்படும் ஒரு மக்கள் சமூகம் நடத்தும் புரட்சிகரமான போராட்டத்தின் வரலாற்றுச் சித்திரம்.

Tamileelam Archive

*மன்னாரில் தாக்குதலுக்குள்ளான இராணுவ ஜீப்*

*யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்ட இராணுவ டிரக் (9-4-84)*

